பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | தை 10 | புதன்கிழமை 23.01.2019 | கதிர் 79

**இனி அது ரகசியம் அல்ல!**

தமிழ்க் கூட்டமைப்புடன் – குறிப்பாக அதன் பேச்சாளர் ஏ.சுமந்திரன் எம்.பியுடன் – மோதுகின்ற பலரும் இப்போது அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கின் றார்களோ என்று சில சமயங்களில் எனக்கு நினைக்கத்தோன்றுகின்றது.

அவரிடம் கேட்கப்பட வேண்டிய பிரதான கேள்வி பக்கம் 02

# சமஷ்டிப் பண்பு இருந்தால் மட்டுமே புதிய அரசமைப்பை ஆதரிப்போம்!

## கூட்டமைப்பின் தலைவர் திட்டவட்டம்



கொழும்பு, ஜனவரி 23

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையிலும், நிபுணர் குழுவின் அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளவாறு ஏக்கிய ராஜ்ஜிய/ ஒருமித்தநாடு என்றவாறு இறுதி வரைவு இருக்கவேண்டும். சமஷ்டி பண்புகளுடன் மாகாணங்களுக்கு நேர்மையான அதிகாரப் பகிர்வு இறுதி வரைவில் காணப்படவேண்டும். இவ்வாறு இருந்தால் மாத்திரமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் மக்களும் அதனை ஆதரிப்பார்கள்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். பக்கம் 11

# ஹெரோய்ன் வைத்திருந்த இளைஞர்கள் நால்வருக்கு எச்சரிக்கையுடன் தண்டனை

## யாழ். நீதிவான் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் பக்கம் 11

# புதிய அரசமைப்பு நாட்டுக்குத் தேவை

## ஒப்புக்கொள்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜன. 23

நாட்டுக்கு அரசமைப்பு ஒன்று தேவை. எனினும் எந்த மாதிரியான அரசமைப்பு பக்கம் 11

# வேலைவாய்ப்பில் தமிழர் திட்டமிட்டுப் புறக்கணிப்பு

## சபையில் சிறிதரன் எம்.பி. கொதிப்பு

கொழும்பு, ஜன. 23

தொழில்வாய்ப்புக்கான பரீட்சைகளில் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது எனவும், பக்கம் 11

# ஞானசாரரை விடுவிக்குமாறு மகாநாயக்கர்கள் கோரிக்கை

## ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஜன. 23

நீதிமன்றத்தை அவமதித்தக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் பக்கம் 11

# பிரிகேடியர் பிரியங்கவின் மீது நடவடிக்கை எடுக்க இயலாது!

## கைவிரிக்கின்றது இலங்கை அரசு

கொழும்பு, ஜன. 23

பிரிட்டனுக்கான இலங்கைத்தூதரத்தின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது பக்கம் 11

# சேனா படைப்புழுவின் தாக்கம் வடக்கிலும் வேகமாகப் பரவல்!

கொழும்பு,ஜன.23

சோளப் பயிர்ச்செய்கைகளில் வேகமாகப் பரவிவரும் படைப் பக்கம் 11

# ஞானசார தேரருக்கு பெப்ரவரி 4 விடுதலை

## துமிந்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பக்கம் 11

# ரெலோவின் நிராகரிப்புக்கு நான் பதிலளிக்கமாட்டேன்

## கூட்டமைப்பின் தலைவர் தயக்கம்



கொழும்பு, ஜன. 23

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழுவின் அறிக்கையை ரெலோ கட்சியினர் நிராகரித்துள்ளமை குறித்து கருத்துக்கூற நான் விரும்பவில்லை. அது அவர்களின் தனிப்பட்ட முடிவு.

– இவ்வாறு பக்கம் 11

# வலி. வடக்கில் 39 ஏக்கர் ராணுவத்தால் விடுவிப்பு

## விடுவிக்கப்பட்ட வீடொன்றின் சுவரில் சிங்கள மன்னர்களின் சிற்பங்கள்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 23

வலி.வடக்கில் 39 ஏக்கர் காணிகள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து விடுவிக்கப்பட்டன. தையிட்டி தெற்கில் 30 ஏக்கர் காணி பக்கம் 11

# நன்றாக இருந்த வீடுகளை இடித்தழித்த இராணுவம்!

## நேற்று அங்கு சென்ற மக்களுக்கு ஏமாற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 23

வலிகாமம் வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட காணி பக்கம் 11

# வலி.வடக்கில் இன்னும் 3000 ஏக்கர் ராணுவத்தினரின் கட்டுப்பாட்டில்

## பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் தகவல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 24

வலிகாமம் வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் இன்னமும் 3000 ஏக்கர் காணிகள் பக்கம் 11

# ரெலோ, புளொட் இரட்டை வேடம்!

## சாடுகின்றார் சிவசக்தி ஆனந்தன்

வவுனியா, ஜன. 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோவும், புளொட்டும் இரட்டை வேடத்துடன் செயற்படுகின்றன என ஈ.பி.ஆர்.எல்.எப் குற்றம் சுமத்தியுள்ளது.

அந்தக்கட்சியின் நாடாளுமன்ற பக்கம் 02

# கச்சதீவு திருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவிற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

புனித கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவ காலஏற்பாடுகள் தொடர்பாக உயர்மட்டக்கலந்துரையாடல் நேற்று யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் யாழ் மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை எதிர்வரும் 15 ஆம் 16 ஆம் திகதி மார்ச் மாதம் நடத்துவதற்கு சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை கடந்த வருடங்களை போல் 15 ஆயிரத்தில் இருந்து 20 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரம் இம்முறை இந்தியாவில் இருந்தும் அதிக ளவான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே பக்தர்கள் இளைப்பாறுவதற்கு நிழல் கூடாரங்கள் 70, மற்றும் குடிதண்ணீர்த் தாங்கிகள் 150, மலசலகூட வசதிகள் என்பன கடற்படையினர் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலகம், பிரதேச சபையினரின் ஒத்துழைப்பில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பக்தர்களுக்கு பல நன்மைகளைத் தரக்கூடியவகையில் இதர செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகட்டுவான் வரையான போக்குவரத்து சேவையை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் மற்றும் இதர போக்குவரத்துச் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் படகு சேவைகளும் ஒழுங்கமைக் கப்பட்டுள்ளன– என்றார். (ஐ-07)

**படைத் தளபதி உட்பட எண்மர் கொலை;**

# 2 முன்னாள் போராளிகளுக்கு 25 ஆண்டுகள் கடூழியச் சிறை

கொழும்பு, ஜன. 23

அநுராதபுரம் வில்பத்து பிராந்திய கஜபா படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கேணல் ஜயந்த சுரவீர உட்பட 4 இராணுவத்தினரும் 4 வன அலுவலர்களும் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றத்துக்கு விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் அமைப்பின் முன்னாள் போராளிகள் இருவருக்கு 25 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

சூரியகாந்தன் ஜெயச்சந்திரன் எனப்படும் உதயன் அல்லது ஐயன், சிவப்பிரகாசன் சிவசீலன் எனப்படும் இளையன் ஆகிய முன்னாள் போராளிகள் இருவருக்கே இந்தக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக் கப்பட்டது.

அவர்கள் இருவர் மீதான 5 குற்றங்களுக்கும் தலா 5 ஆண்டுகள் வீதம் 25 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை விதித்த மேல் நீதிமன்ற நீதிபதி மகேஸ் வீரமன், தண்டனையை 5 ஆண்டுகள் சம காலத்தில் அனுபவிக்கும் வகையில் தீர்ப்பளித்தார்.

2007ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் திகதி வில்பத்து வனப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் வில்பத்து பிராந்தியக் கட்டளைத் தளபதி கேணல் ஜயந்த சுரவீர உள்பட 4 இராணுவத்தினரும் 4 வன அலுவலர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் சூரியகாந்தன் ஜெயச்சந்திரன் எனப்படும் உதயன் அல்லது ஐயன், சிவப்பிரகாசன் சிவசீலன் எனப்படும் இளையன் ஆகிய முன்னாள் போராளிகள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவருக்கும் எதிராக 9 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றில் 2015ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தது. நேற்று இந்த வழக்கு தீர்ப்புக்காக அழைக்கப்பட்டது.

5 குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகள் என முன்னாள் போராளிகள் இருவரும் இனங்காணப்பட்டனர். அத்துடன், 4 குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படாததால் எதிரிகளை நிரபராதிகள் என மன்று தீர்ப்பளித்தது.

குற்றவாளிகள் என இனங்காணப்பட்ட 5 குற்றங்களில் ஒவ்வொன்றுக்கும் ஐந்து ஆண்டுகள் என்ற அடிப்படையில் 25 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து மேல் நீதிமன்ற நீதிபதி மகேஸ் வீரமன் தீர்ப்பளித்தார்.

5 குற்றங்களுக்குமான தண்டனையை குற்றவாளிகள் ஏக காலத்தில் அனுபவிக்கும் வகையில் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையை மன்று வழங்கியது. (ஐ)

# வாகரைப் பிரதேச சபை உறுப்பினரின் கணவர் வாவியிலிருந்து சடலமாக மீட்பு

கொழும்பு, ஜன. 23

வாகரைப் பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான குமுதலெட்சுமியின் கணவர், வாவியிலிருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கணவர், அழகாபுரியைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தந்தையான காளிக்குட்டி சுதாகரன் (வயது–38) என்பவரே சடலமான மீட்கப்பட்டவராவார்.

மீன்பிடித் தொழிலாளியான இவர், தட்டுமுனை ஆற்றில் இறால் பிடிப்பதற்காக வலை கட்டுவதற்கு ஞாயிற்றுக்கிழமை சென்றிருந்த நிலையில் காணாமல்போயிருந்தார்.

இதனையடுத்து பொலிஸாரும், மீனவர்களும், பிரதேச பொதுமக்களுமாகத் தேடியும் காணாமல் போனவரைப் பற்றிய எதுவித தடயங்களும் கிடைத்திருக்காத நிலையில், தட்டுமுனை வாவியிலிருந்து நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் வலிப்பு நோய்க் குணம் உள்ளவர் என்று உறவினர்கள் தெரிவித்தனர். ஆற்றில் வலை கட்டும்போது வலிப்பு நோய் ஏற்பட்டதன் காரணமாக இவர் வாவியில் வீழ்ந்து, சேற்றில் புதையுண்டிருக்கலாம் என உறவினர்கள் ஊகம் தெரிவித்தனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று கேட்கப்படாமல் எஞ்சி நிற்கின்றது. யாரும் அதைப்பற்றி அவரிடம் கேட்பவர்களாகத் தெரியவில்லை. அந்தக் கேள்வியைப் பலரும் சாடை மாடையாகவே கேட்கத் தொடங்குகின்றார்களே தவிர, முழுமையாகக் கேட்டு முடிப்பதில்லை என்பதுதான் எனது ஆதங்கம்.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி இனி நகராது என்பது இப்போது ஓரளவுக்குத் தெளிவாகிவிட்டது.

வெளியேவந்திருப்பது–நாடாளுமன்றமாகக் கூடிய அரசமைப்புப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது – மாதிரி யாப்புக் கூட இல்லை. நகல் யாப்புக்கான மாதிரி வடிவத்துக்கென நிபுணர் குழு பரிந்துரைத்த அறிக்கை மட்டுமே. அத்துடன் இந்த விவகாரம் அடங்கிவிடும் – மீளாத்துயில் கொண்டுவிடும் – என்பதுதான் யதார்த்தப்புறநிலைமை. (இல்லை, அது விடயம் மேலும் முன்நகர்வதற்கு இன்னும் வாய்ப்புகள் உண்டு என்றுயாரேனும் கனவுலகில் சஞ்சரித்தபடி வாதிட்டால் அதற்கு நான் எதிர்வாதம் செய்யப் போவதில்லை.)

இந்த முயற்சி இப்படித்தான் முட்டுச் சந்தியில் வந்து முடங்கும், இதற்கு மேல் எதுவும் நடக்காது என்று நான் முன்னமே கூறினேன் என்று அரசின் பங்காளியான அமைச்சர் மனோகணேசன் கூட அண்மையில் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். தமிழர் தரப்புக்கு – சுமந்திரன் தரப்புக்கு – பெரிதும் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட தமது பௌத்த, சிங்கள மேலாதிக்கப் புத்தியைக் காட்டிவிட்டார். 'ஏக்கிய இராஜ்ஜிய' / 'ஒருமித்த நாடு' என்ற தமது கோட்பாட்டு ரீதியிலான கருத்தியலைத் தூக்கி கடாசிவிட்டு, தற்போதைய அரசமைப்பின் 2 ஆவது ரத்தில் கூறப்பட்டவாறான வகையில் நாட்டின் ஒற்றையாட்சி முறைமையைப் பேணிப் பாதுகாப்பதே தனது கட்சியின் நிலைப்பாடு என்பதை அரசமைப்புப் பேரவையிலேயே தெளிவாகவும், வெளிப்படையாகவும், திட்டவட்டமாகவும் அவர் அறிவித்துவிட்டார்.

இனியும் இந்த அரசமைப்பு முயற்சி முன் நகரும் என்று நம்புகின்றீர்களா என்றுதான் நாம் சுமந்திரன் – சம்பந்தன் இணையைப் பார்த்துக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். அப்படிக் கேட்பதன் மூலம், அந்த முயற்சி இன்னும் முன்நகர்வதற்கு வாய்ப்பு இருக்குமோ என்ற சந்தேகம் கேட்கின்ற தரப்பாகிய எங்களுக்கும் இன்னும் இருக்கின்றது என்பது போன்ற நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கின்றோம்.

*"பதவியையும், அரசியலையும் விட்டுவிடுவதற்கான எனது இராஜினாமாக் கடிதத்தின் அரைவாசிப் பகுதியை எழுதிவிட்டேன்."* என்று எப்போதே அறிவித்தவர் சுமந்திரன். அத்தோடு *"உண்மை மட்டும் பேசி அரசியல் செய்வோம்."* என்று புதிய அறம் உரைத்தவரும் அவரே.

*"புதிய அரசமைப்பு முயற்சி இனியும் இந்த நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தில் முன் நகருவதற்கான வாய்ப்பு இல்லை என்பதே பலரினதும் கணிப்பு. தமிழர்களின் பட்டறிவின்பால் எழுந்த தீர்மானமும் அதுதான். இந்தப் புதிய அரசமைப்பு முயற்சி –அதன் மூலமான தீர்வு எத்தனம் – தோற்றுப் போனால் பதவியையும் அரசியலையும் விட்டு விலகுவேன் என்று அறிவித்திருந்தீர்கள். அத்தகைய பதவி விலகல் கடிதத்தின் எஞ்சிய பகுதியை எப்போது பூர்த்தி செய்து வெளியிடப் போகின்றீர்கள்? இல்லை, இந்த நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடையும் வரை – அல்லது புதிய ஜனாதிபதி தேர்வாகி அடுத்த வருடம் பெப்ரவரியில் இந்த நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அவரது கைக்கு வந்து, அவர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வரை – இன்னும் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான விடயங்கள் முன்நகர்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்ற சல்ஜாப்புக் கூறி, பதவியில் தொடரப் போகின்றீர்களா? அல்லது உங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அவ்வப்போது விடுக்கும் போராட்ட அறிவிப்புப் போல – சில ஆண்டுகளுக்கு முன்னர் உங்கள் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஒரு தடவை வெளியிட்ட 'சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பேன்' என்ற பிரகடனம் போல – பதவி துறப்பேன் என்ற உங்கள் அறிவிப்பும் புஸ்வாணமாகிவிடுமா? மீண்டும் ஒரு தடவை தெளிவுபடுத்தினீர்களானால் நல்லது."* என்று சுமந்திரனிடம் கேட்க விரும்புகின்றோம்.

ஏனென்றால் மாகாண சபைத் தேர்தல்கள் நெருங்குகின்றன. உங்களுக்குப் 'பந்தம்' பிடித்தால் 'சீட்' நிச்சயம் என்ற எண்ணத்தில் சில செம்புதூக்கிகள் 'ஓவர் அக்டிங்' கொடுக்கின்றன. புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி விடயத்தில தென்னிலங்கையில் நீங்கள் நம்பிய தரப்புகள் உங்களுக்கு முதுகில் குத்திய அதிர்ச்சியில் இருக்கும் நீங்கள், தப்பித் தவறி நீங்கள் இப்போது குறிப்பிட்ட மாதிரி 'உண்மை பேசி அரசியல் செய்வோம்' என்ற கேட்பாட்டின் அடிப்படையில் உண்மையாக நடக்க முயன்று, முன்னர் அறிவித்தபடி பதவியையும் துறந்து, அரசியலையும் விட்டு விலகி, நேர்மையாகச் செயற்பட்டு விட்டீர்களானால் உங்கள் செம்புதூக்கிகளின் –அல்லைக்கைகளின்– கதி அதோ கதியாகிவிடும்.

எதற்கும் நேரத்தோடு உங்கள் முடிவை இன்னொரு தடவை தெளிவுபடுத்தி விட்டீர்களானால் நல்லது. பலருக்கும் முடிவுகளை எடுக்க அது சௌகரியமாக இருக்கும்.

-மின்னல்-

# மஹிந்தவின் செயலகத்தில் பிரதமர் ரணிலின் படம்!



கொழும்பு, ஜன. 23

எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவருக்குரிய அலுவலகத்தில் நேற்றுக் கடமைகளை ஆரம்பித்தார்.

பிரதமர், சபாநாயகர் ஆகியோருக்கு அடுத்தபடியாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்கே அதிக சிறப்புரிமைகளும், அதிகாரங்களும் இருக்கின்றன.

எதிர்க்கட்சித்தலைவருக்கென நாடாளுமன்றத்தில் மூன்றாம் மாடியில் தனி அலுவலகமொன்று இருக்கின்றது. பணியாட்களும், வாகனங்களும் அரச செலவிலேயே வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனே செயற்பட்டார். அவரின் கதிரையிலேயே மஹிந்த நேற்று அமர்ந்தார்.

அத்துடன், இதற்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த ரணில் விக்கிரமசிங்க, நிமல் சிறிபாலடி சில்வா உள்ளிட்டவர்களின் படங்களும், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ)

## ரெலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புக்கள் விளையாட்டுக்கழகங்களுக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தொடர்ச்சியாகத் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். வரவு – செலவுத் திட்டம் உள்ளிட்ட பல அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ரெலோவும், புளொட்டும் ஆதரவு வழங்கி வந்தன. தற்போது புதிய அரசமைப்பு உள்ளிட்ட பல விடயங்களை ஏற்றுக் கொள்ளவில்லை என அவர்கள் கூறுகின்றனர். இது அவர்களின் இரட்டைவேடத்தை வெளிப்படுத்துகின்றது – என்றார். (ஐ)

# மாகாணசபைத் தேர்தலை பிற்போட விடமாட்டோம்

## கூறுகின்றார் பஸில் ராஜபக்ஷ



கொழும்பு, ஜன. 23

மாகாண சபைகள் சிலவற்றுக்கான ஆயுள்காலம் நிறைவடைந்து ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள போதும், மீண்டும் தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கான நடவடிக்கைகளிலேயே அரசு ஈடுபட்டுள்ளது. ஆயினும் அதற்கு இடமளிக்க முடியாது என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

சில மாகாண சபைகளுக்கான ஆயுள்காலம்நிறைவடைந்து ஒன்றரை வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இன்னும் மூன்று மாகாண சபைகளுக்கான ஆயுள் காலம் எதிர்வரும் மாதங்களில் நிறைவடையவுள்ளன. இந்நிலையில் மாகாணசபைத் தேர்தலை மேலும் பிற்போடுவதற்கான நடவடிக்கைகளிலேயே அரசு ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது–என்றார். (ஐ)

## தேர்தல் கோரி உயர்நீதிமன்றுக்கு செல்லும் முன்னாள் முதல்வர்கள்

கொழும்பு, ஜன. 23

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக வட மத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் தெரிவித்தார்.

அதற்கமைய, எதிர்வரும் வாரத்துக்குள் வடமத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களின் முன்னாள் முதலமைச்சர்களுடன் இணைந்து வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

4 மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டு ஒரு வருடமும் 4 மாதங்களும் கழிந்துள்ளதாகவும் வட மத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## புத்தளம் பிரதேச சபையின் உப தலைவர் கைதானார்

கொழும்பு, ஜன. 23

புத்தளம் பிரதேச சபையின் உப தலைவர் ஜயம்பதி பத்திராஜா நேற்று முன் தினம் மாலை முந்தல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மதுரங்குளி செம்பட்ட வேலாசிய பகுதியில் வீதியில் வெட்டப்பட்டிருந்த பாரிய குழியொன்றுக்குள் விழுந்து நபரொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுரங்குளி– சுகந்தகம பகுதியைச் சேர்ந்த, 32 வயதுடைய வர்ணகுலசூரிய நிலந்த பெர்னான்டோ என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புத்தளம் பிரதேச சபைக்குட்பட்ட, மதுரங்குளி– வேலாசிய பிரதேசத்தில், வீதி அபிவிருத்திப் பணிக்காக வெட்டப்பட்டிருந்த குழிக்குள், மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது விழுந்து படுகாயமடைந்த அந்த நபர் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, புத்தளம் பிரதேச சபையின் உபதலைவரே அந்த வீதிப் புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்து வந்துள்ளதாகக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் பிரதேச சபையின் உபதலைவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, சம்பவம் இடம்பெற்ற இடத்தில் எவ்வித அறிவித்தல்களும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும், இந்த இடம் இருள் சூழ்ந்து காணப்பட்டதால் இந்த அனர்த்தம் நேர்ந்திருக்கலாம் எனவும் பொலிஸார் கூறினர். (ஐ)

## 90 கிலோ ஹெரோய்ன் மீட்பு; வெளிநாட்டவர் மூவர் கைது

கொழும்பு, ஜன. 23

கொள்ளுப்பிட்டியில் இருந்து 90 கிலோ கிராம் பெறுமதியான ஹெரோய்ன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஹெரோய்ன் போதைப் பொருள் 108 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியைக் கொண்டது எனக் கூறப்பட்டது.

இதுதொடர்பில் வெளிநாட்டவர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அமெரிக்க பிரஜைகள் இருவரும் மற்றும் ஆப்கானிஸ்தான் பிரஜையொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர். (ஐ)

## தோட்டத் தொழிலாளர்களுக்காக இன்று நாடு முழுக்க போராட்டம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தி நாட்டின் பல பகுதிகளில் மாபெரும் போராட்டமொன்று இடம்பெறவுள்ளது. இந்தப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

பிரதான எதிர்ப்புப் பேரணி சகல பொதுநல அமைப்புக்களினதும் பங்களிப்புடன் கொழும்பு கோஸ்பார் சந்தியில் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போராட்டங்கள் மாத்தளை, இரத்தோட்டை, பொகவந்தலாவை, ஹற்றன், மத்துகம, பதுரலிய, தலவாக்கலை, ராகல, நுவரெலியா, தெல்தொட்ட, இரத்தினபுரி, கேகாலை தெய்யோவிட்ட, பதுளை நகரம், அப்புத்தளை, தெமோதர, எட்டம்பிட்டிய பகுதிகளிலும் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் மாலை 3 மணிக்கு பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு அருகிலும், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களிலும் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, ருஹூணு பல்கலைக்கழகம் மற்றும் அனைத்து பல்கலைக்கழகங்களுக்கு முன்பாகவும் நண்பகல் 12 மணிக்கு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1000 ரூபாயாக அதிகரித்துத் தருமாறு வலியுறுத்தி இதற்கு முன்னரும், இலங்கையின் பல பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பல்வேறுப்பட்ட பேச்சுக்களும் இடம்பெற்றிருந்தபோதும் இலக்கை அடையமுடியாமல் போனது. இந்நிலையில், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எந்தத் தேர்தல் நடந்தாலும் எதிர்கொள்ள தயாராகுங்கள்

## கட்சியின் செயற்பாட்டாளர்கள் மத்தியில் டக்ளஸ் எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

இந்த ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் எந்தத் தேர்தல் வந்தாலும் அதை எதிர்கொள்ள நாம் தயாராகவேண்டும். எமது கட்சியின் செயற்பாடுகள் யாவும் மக்கள் மயப்பட்டதாகவே இருந்துவருகிறது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கட்சியின் யாழ் மாவட்ட நிர்வாகிகள், செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த காலங்களில் நாம் யதார்த்தமான முறைகளில் தூரநோக்குடன் கூடிய வழிமுறைகளில் சிந்தித்து ஓர் உறுதி மிக்க அரசியல் தீர்வுடன் எமது மக்களை அழிவுகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றும் அந்த நடைமுறை சாத்தியமான வழிமுறையையே நிரந்தர தீர்வையும் எமது இனத்திற்குப் பெற்றுத்தரும் என்றும் வலியுறுத்தி வந்திருந்தோம். ஆனாலும் எமது அந்த வழிமுறைகளை எல்லாம் தத்தமது சுயநலங்களுக்காக ஏளனம் செய்து நிராகரித்த சக தமிழ் அரசியல் தரப்பினர் இன்று நாம் முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைதான் சரியானதென ஏற்றுக்கொண்டுள்ளனர். அதை மேடைகளிலும் வெளிப்படையாகக் கூறத் தொடங்கியுள்ளனர்.



இது வரவேற்கத்தக்க ஆரோக்கியமான விடயமாக இருந்தாலும் அந்த வழிமுறையைக்கூட அவர்கள் தமது சுயநலன்களுக்காக உண்மைத்தன்மையற்ற போக்குடனேயே வெளிப்படுத்தி வருகின்றனர்.

எமது பொறிமுறை ஊடாகவே எமது இனம் எதிர்கொள்ளும் அரசியல் மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த செயற்திட்டங்களைச் செயற்படுத்த முடியுமென நாம் கடந்த காலங்களில் செயற்படுத்திக் காட்டியுள்ளோம்.

ஆனாலும் அவற்றை வெற்றிகரமாக மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு எமக்கு மக்களின் ஆணையும் அரசியல் பலமும் இன்றியமையாததாகின்றது.

இந்த ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் எந்தத் தேர்தல் வந்தாலும் அதை எதிர்கொள்ள நாம் தயாராகவேண்டும். எமது கட்சியின் செயற்பாடுகள் யாவும் மக்கள் மயப்பட்டதாகவே இருந்துவருகிறது. நாம் எமது செயற்பாடுகளை கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் தோறும் வட்டார ரீதியாக கட்டமைத்து முன்னெடுத்து வந்திருக்கின்றோம்.

ஆனாலும் இந்த நிர்வாகக் கட்டமைப்புகள் மேலும் வலுப்படுத்தப்பட்டு எமது கட்சியின் கொள்கையையும் வேலைத் திட்டத்தையும் வென்றெடுக்கும் வகையில் கட்சித் தோழர்களும் முக்கியஸ்தர்களும் அர்ப்பணிப்புடனும் உழைக்க வேண்டியது அவசியமானது.

அந்தவகையில் இந்த வட்டாரக் கட்டமைப்பை நாம் மேலும் வலுப்படுத்தி மக்கள் மத்தியில் எமது கருத்துக்களையும் மக்களுக்கான எமது பணிகளையும் விரிவுபடுத்த வேண்டியது அவசியமாகின்றது. அந்தவகையில் அதற்கான திட்டங்களை பிரதேசங்கள் தோறும் முன்னெடுக்க நாம் முழுமையாக உழைக்க வேண்டும்.

எனவேதான் இந்த ஆண்டில் எம்மை நோக்கி எந்தவகையான தேர்தல் வந்தாலும் அதற்கு முகங்கொடுக்கும் வகையில் நாம் புதிய வேகத்துடனும் நம்பிக்கையுடனும் எமது கட்சியின் கொள்கை மற்றும் இலட்சியக் கனவை ஈடேற்றும் வகையிலும் அனைவரும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டியது அவசியமானது–என்றார். (ஐ)


## அறிவித்தல்

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் என்ற முகவரியை பிறப்பிடமாகவும், தற்போது இல. 474, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தற்காலிகமாக வசிப்பவனுமாகிய **சின்னையா சிவகுமாரன்** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **சின்னையா ராஜேஸ்குமார்** என மாற்றிக்கொண்டுள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன் எனவே இன்றிலிருந்து சகலரும் என்னை சின்னையா ராஜேஸ்குமார் என்றே அழைக்கவேண்டுமென்றும், சகல ஆவணங்களிலும் எனது பெயரை சின்னையா ராஜேஸ்குமார் என்றே குறிப்பிடவேண்டுமென்றும் இத்தால் கேட்டுக்கொள்கிறேன்.

**சின்னையா ராஜேஸ்குமார்**
**(முன்னைய பெயர் - சின்னையா சிவகுமாரன்)**

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# மனதின் நிறம் வெள்ளையல்ல…!

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் எழுச்சி பெற்ற ஆரம்ப காலகட்டத்தில் இருந்து பிரிட்டனில் பேணப்பட்டு வந்த நானூறு இராஜதந்திரக் கோப்புகளைத் தான் அழித்திருப்பதை பிரிட்டன் வெளிவிவகாரப் பணியகம் ஒப்புக்கொண்டுள்ளது.

இதன்மூலம், பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் வரலாற்றுப் பதிவுகளைச் சிதைத்திருப்பதாக லண்டனில் இருந்து வெளியாகும் த மோர்னிங் ஸ்ரார்' நாளிதழ் விமர்சித்திருக்கின்றது.

இலங்கையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான பிரிட்டனின் அருவருக்கத்தக்க முகத்தை இந்த நடவடிக்கை மூலம் மூடி மறைத்துவிட பிரிட்டன் எத்தனித்திருக்கின்றது என்பதே இவ்விடயத்தில் உண்மையாகும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் இன்றைய இழி நிலைக்கு – இக்கட்டுக்கு –பிரதான சூத்திரதாரிகளில் ஒன்று பிரிட்டன் என்பதே அவர்களின் நிலைப்பாடு.

இலங்கைத் தமிழர்கள் காலாதிகாலமாகப் பேணி வந்த அவர்களின் தனாதிக்கத்தையும் இறைமையையும் சிதைத்தழிக்கும் குற்றத்தை புரிந்தவர்களில் பிரதானமானவர்கள் பிரிட்டிஷார்தான். அவர்களின் எதேச்சாதிகாரமான – தான் தோன்றித்தனமான – ஆக்கிரமிப்புப் போக்குடைய – மேலாதிக்க – செயற்பாட்டின் விளைவே ஈழத் தமிழினத்தை இன்று நட்டாற்றில் விட்டிருக்கின்றது என்பது வரலாறு.

அந்த ஆரம்ப கால சரித்திர உண்மையை மூடி மறைக்க முடியாத பிரிட்டன், அந்த வரலாற்றுப் பதிவின் பிற்பகுதிச் சரித்திரத்தை மூடி மறைப்பதன் மூலம் தனது உண்மை முகத்தின் – சொரூபத்தின் – ஒரு பகுதியை மறைத்துவிட எத்தனிக்கின்றது. அவ்வளவே.

இலங்கையின் வடக்கையும், கிழக்கையும் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் வரலாற்றுக் காலம் முதல் அங்கு இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட அரசை – அல்லது அரசுகளை – பேணி வந்த மையுடன், தம்மை தாமே ஆண்டு, தங்கள் காரியங்களைத் தாங்களே கையாண்டு, வாழ்ந்தும் வந்தனர் என்பதே சரித்திரம்.

1505 இல் போர்த்துக்கீசரின் வருகையுடன் ஆரம்பமான இலங்கைத் தீவு மீதான அந்நிய ஆதிக்கம் அடுத்த 443 ஆண்டுகள் தொடர்ந்தது. போர்த்துக்கீசரைத் தொடர்ந்து ஒல்லாந்தரும் (டச்சுக்காரரும்) அவர்களை அடுத்து ஆங்கிலேயரும் இலங்கையைத் தமது வல்வந்தமான ஆளுகைக்கு உட்படுத்தினர். 19ஆம் நூற்றாண்டு வரைத் தனது தனித்துவத்தையும் தன்னாதிக்கத்தையும் பேணி வந்த வடக்குத் தமிழரின் இராச்சியத்தைத் தமது ஆக்கிரமிப்பு மூலம் கைப்பற்றிய பிரிட்டிஷார் ஆரம்பத்தில் அதனைத் தனித்துவமாகவே ஆண்டனர்.

அதுவரை காலமும் கரையோரம், கண்டி, வடக்கு – கிழக்கு என வெவ்வேறு ஆளுகையில் இருந்த தனித்துவ இராச்சியங்கள் அனைத்தையும் கைப்பற்றி ஒன்றுபடுத்திய அவர்கள் தங்களின் நிர்வாக வசதிக்காக 1832 இல் இலங்கையின் தனித்தனி இராஜ்ஜியங்களை ஒன்றுபடுத்தி, ஓர் ஆளுநரின் கீழ் கொண்டு வந்தனர்.

தமிழர் தாயகத்தின் தனித்துவ இறைமை கண்டி மற்றும் கரையோர இராச்சியங்களின் இறைமையுடன் கட்டி ஒன்றிணைக்கப்பட்ட வரலாற்றின் சுருக்கம் இதுதான்.

இப்படி வல்வந்தமாகப் பறித்தெடுக்கப்பட்டு, தெற்கின் இறைமையுடன் ஒன்றிணைக்கப்பட்ட நிலையில் 1948 இல் இந்த இலங்கைத் தீவின் மீதான தனது பிடியைக் கைவிட்ட பிரிட்டிஷார், எங்கள் இறைமையையும் சேர்த்து, இந்தத் தீவில் பெரும்பான்மையினரிடமே கையளித்துச் சென்றமைதான், கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து இலங்கையை ஆட்டிப் படைத்த துன்பியல் நிகழ்வுகளின் ஒரே பிரதான – அடிப்படை – காரணமாயிற்று.

இந்தத் தீவில் தனித் தனியாக இருந்த தமிழர்களினதும், சிங்களவர்களினதும் இராச்சியங்களைத் தனது மேலாதிக்கப் போக்கில் கைப்பற்றி, முழுத்தீவையும் சுரண்டிச் சூறையாடி ஏப்பமிட்ட ஆங்கிலேயர்கள், இந்தத் தீவை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் நேர்ந்தபோது, அந்த இராச்சியங்களைத் தனித்தனியாக விட்டுச் செல்லாமல், ஒன்றுபடுத்தி, கட்டிப்போட்டு, அதன் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வலிமையை ஜனநாயகம் என்ற அட்சர கணிதக் கேலிக் கூத்தின் கீழ் சிங்களப் பெரும்பான்மையினரிடமே விட்டுச் சென்றமையின் விளைவை சிறுபான்மையினரான நாங்கள் – தமிழர்கள் – பெருங்கொடூரமாக அனுபவித்து வருகின்றோம்.

தங்களின் பெருந்தவறினால் ஒரு தேசிய இனத்துக்கு இழைக்கப்பட்ட வரலாற்றுக் கொடூரத்தைத் துடைத்தழிக்கவும் நீதி செய்யவும் கடந்த காலங்களில் கிடைத்த பல்வேறு வாய்ப்புகளை பிரிட்டன் உதாசீனம் செய்தமையோடு சிறுபான்மையினரை எட்டி உதைத்து அவமானப்படுத்தும் பாங்கில் நடந்து கொண்டமையும் எமது வரலாற்றுப் பட்டறிவாகும்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை அரசுடன் இராணுவச் சமவலு நிலையில் சம அந்தஸ்துடன் அமர்ந்திருந்து, ஈழத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் பேச்சு நடத்தியபோது – சமரச முயற்சியில் ஈடுபட்டபோது – அந்த முயற்சிகளைப் பாழ்படுத்தும் விதத்தில், புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டு, தடைசெய்து, தமிழர் பிரதிநிதிகளான புலிகளின் சம அந்தஸ்துத் தரத்தைச் சீர்குலைத்து, அந்த அமைதி முயற்சிகளை இலங்கை ஆளும் தரப்புக்குச் சாதகமாக முடிக்கும் விதத்தில் காய் நகர்த்திய நாடுகளுள் பிரிட்டனும் பிரதானமானது.

இப்படி இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக வரலாற்றுத் தவறைத் தொடர்ந்து இழைத்து வரும் ஆங்கிலேய தேசம், அவர்களின் வீரம் செறிந்த விடுதலைப் போரட்டத்தை நசுக்குவதற்கு இதுவரை காலமும் தான் முன்னெடுத்த இரகசிய சதித்திட்டங்கள் பற்றிய விவரங்கள் அம்பலமாகாமல் இருப்பதைத் தடுப்பதற்காகவே இந்தக் கோவைகளை அழித்துவிடும் கைங்கரியத்தையும் மேற்கொள்கின்றது என்பது வெள்ளிடைமலை.

கொலனித்துவ மேலாதிக்கப் போக்கின் பரவணிப் பண்பியல்பு இத்தகையதுதான். அதிலிருந்து பிரிட்டன் மாறும் என்று கருதுவது அர்த்தமற்றது; அபத்தமானது.

தோலின் நிறம் மனதில் இருந்திருந்தால், இந்தத் தீவில் அநீதியையும், அநியாயங்களையும், துன்ப துயரங்களையுமே தொடர்ந்து அனுபவித்து வரும் தமிழினத்துக்கு நீதி செய்வதற்கான தன்னிச்சையான எழுச்சி பிரிட்டிஷ் சாம்ராச்சியத்திலிருந்து எப்போதோ வந்திருக்கும். அது வரவில்லையே….!

# அரியாலை கிழக்கு வீதி அழிந்தமையால் பாடசாலை ஒன்று மூடப்படும் அபாயம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.23

அரியாலைகிழக்குப்பிரதேசத்துக்குச் செல்கின்ற பிரதான வீதி அழிவடைந்துள்ளமையால் அங்குள்ள அரியாலை கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மூடப்படும் அபாய நிலையில் உள்ளது.

எனவே இது தொடர்பில் உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தமிழ்ஆசிரியர்சங்கம்கோரியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில்

யுத்தகாலங்களுக்கு முன்னர் அரியாலை கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர். தரம் – 5வரை இருந்த பாடசாலை தரம் – 8வரை உயர்த்தப்பட்டது. தற்போது மொத்தமாக 10 மாணவர்களே உள்ளனர். இதற்கு பிரதான காரணமாக அரியாலை கிழக்கு நோக்கிச் செல்லும் பிரதான வீதி பூம்புகார் வரை செப்பனிடப்பட்டு, அதில் இருந்து அரியாலை கிழக்கு வரை செல்லும் வீதி மிகமோசமான குண்டும், குழியுமாக மாறியுள்ளதோடு, சாதாரணமாக துவிச்சக்கரவண்டியில்கூட பயணம் செய்யமுடியாத அளவுக்கு அழிவடைந்துள்ளது.

அரியாலை கிழக்கு கிராமத்தில் உள்ள சிறுவீதிகள் நல்லூர் பிரதேச சபையால் செப்பனிடப்பட்டுள்ளன. பிரதான வீதியைச் செப்பனிடும் பொறுப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரியது. நீண்டகாலமாக அங்குள்ள மக்கள் கோரிக்கை முன்வைத்தும் கவனிப்பாரற்ற வீதியாக அரியாலை கிழக்கு வீதி உள்ளமை உயரிய மட்டங்களுக்குத் தெரியாத விடயமாக இருக்குமோ என்ற ஐயப்பாடும் எழுந்துள்ளது. அதுமட்டுமன்றி நீண்டகாலமாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக பேசப்படுகின்றது. அந்த நிதிக்கு ஏதாவது நடந்துவிட்டதோ எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இப்பிரதேசத்தில் பெருமளவான நெல்வயல்கள் உள்ளன. கடற்றொழில் மூலம் பயன்பெறுவோர் சென்றுவரும் பிரதேசமாகவும் இது உள்ளமையால், இந்த வீதி உடனடியாக செப்பனிடப்படவேண்டும். இதனை விட அரியாலை மக்களின் பிரதான வழிபாட்டுத் தலங்களும் இங்குள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள அரியாலை கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கற்ற ஏராளமான மாணவர்கள் பாடசாலை விடுகைப்பத்திரங்களைப் பெற்று நகர்ப்புறப் பாடசாலைகளைநோக்கிகுடும்பத்தோடு நகர்ந்து வருகின்றனர். காரணம் இந்தவீதியால் தங்களின் அன்றாட கடமைகளின் நிமித்தம் நகர்ப்புறத்துக்கு பயணம் செய்யமுடியாமல் இருப்பதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கவனத்துக்கு கொண்டு வருகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 9 மி.மீ. ரக துப்பாக்கிகளின் அனுமதிப்பத்திரம் இரத்து!

கொழும்பு,ஜன.23

நாட்டில் பதிவு செய்யப்பட்ட 4700 கைத் துப்பாக்கிகள் காணப்படுவதாகவும், இவை தொடர்பிலான தகவல்கள் முறையாக காணப்படாதுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த துப்பாக்கிகள் என்ன நோக்கத்துக்காக பெறப்பட்டுள்ளன என்பது தொடர்பில் தகவல்கள் காணப்படாதுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒருவரின் பெயரில் 14 அல்லது 15 துப்பாக்கிகள் பதிவாகியுள்ளன எனவும் அவர் கூறினார்.

இதனால், 9 மி.மீ. ரக துப்பாக்கிகளுக்கான அனுமதிப்பத்திரம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்தாவதாகவும், குறித்த வகை துப்பாக்கிகள் வைத்திருப்பவர்கள் அவற்றை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்து கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு பதிவு செய்யப்பட்ட துப்பாக்கிகள் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய அனுமதிப்பத்திரம் இன்று 23 ஆம் திகதி முதல் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த தினத்தில் துப்பாக்கி வைத்திருப்பவர்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்து தமது துப்பாக்கிகளை பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

# 2018 ஆம் ஆண்டே இலங்கைக்கு வந்ததா சேனா படைப்புழு ?

கொழும்பு,ஜன.23

சேனா படைப்புழு இலங்கைக்கு கடந்த 2018 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட சோள விதைகளுடன் வந்திருக்கலாம் என விவசாயத் திணைக்கள தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பல்தேசியக் கம்பனிகள் மூன்றின் ஊடாக நாட்டுக்கு சோள விதைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த பல்தேசியக் கம்பனிகளில் ஒன்று தனது தனி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக இந்த சேனா படைப்புழுவின் முட்டைகளுடன் சோள விதைகளைக்கொண்டுவந்துள்ளதாகதிணைக்களத்தின் உள்ளக வட்டார தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

கடந்த 2018 ஆம் ஆண்டில் 1200 மெட்ரிக் தொன் சோள விதைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த சோள விதைகள் கொண்டுவரப்பட்ட சேனா படைப்புழுவின் முட்டைகள் திணைக்களத்தின் நோய் கண்டறியும் பிரிவினால் கண்டறிய முடியாமல் போனமைக்கான காரணம் குறித்து கண்டறியப்பட வேண்டும் என்ற கருத்து விவசாய திணைக்களத்தில் எழுந்துள்ளதாகவும் சிங்கள நாளிதழொன்று திணைக்கள வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

# யாழ் பொது நூலகத்தின் நிலையை ஆளுநர் – முதல்வர் நேரில் ஆராய்வு



யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ் மாநகரசபையின் பொது நூலகத்தின் செயற்பாடுகள் மற்றும் தற்போதைய நிலை, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பில் யாழ் மாநகர முதல்வர் மற்றும் வடக்குமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் இணைந்து நேரில் கள விஜயம் ஒன்றை கடந்த வாரம் மேற்கொண்டிருந்தனர்.

இவ் நேரடி விஜயத்தின்போது பிரதம நூலகர் அவர்களினால் தற்போதைய நிலை தொடர்பில் முதல்வர் மற்றும் ஆளுநர் ஆகியோருக்கு விளக்கப்பட்டது. மேலும் நூலகத்தின் முக்கிய தளங்களை, பிரிவுகளை முதல்வர், ஆளுநர் அவதானம் செலுத்தியிருந்தனர். எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இவ் விஜயத்தில் யாழ் மாநகர ஆணையாளர் ஜெயசீலன், ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், ஆளுநர் செயலக அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

## நாளை

24.01.2019
வியாழக்கிழமை

நட்சத்திரம் : பூரம் மு.இ. 11.46 வரை
திதி : சதுர்த்தி பி.இ. 2.40 வரை
சுபநேரம் : 8.06 - 9.36 வரை
இராகுகாலம் : 2.06 - 3.36 வரை

# 3 வருடம் முடியும் முன்னரே சேதமுற்ற ஸ்கந்தபுரம் - முட்கொம்பன் காப்பெற் வீதி




கிளிநொச்சி,ஜன.23

பல மில்லியன்கள் ரூபா செலவில் காபெற் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் முடியும் முன்னரே சேதமுற்ற வீதி தொடர்பில் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தின் ஸ்கந்தபுரம் முட்கொம்பன் பிரதான வீதி முதற்தடவையாக காப்பெற் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டது. மிக மோசமான நிலையில் காணப்பட்ட வீதி காப்பெற் வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டதனால் பொது மக்கள் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தனர்.

ஆனால் அப்பிரதேச மக்களின் மகிழ்ச்சி மூன்று வருடங்கள் கூட நிலைத்திருக்கவில்லை. காரணம் இந்த வீதி பல இடங்களில் மிக மோசமாக சேதமுற்றுள்ளது. இன்னும் சில வாரங்களில் சேதமுற்ற பகுதிகள் முற்று முழுதாக பாதிப்புற்று விடும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு வீதியின் பல இடங்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு வருவ தோடு அப்பகுதியும் சேதமடையும் நிலையில் காணப்படுகிறது.

அபிவிருத்தியின்போது குறிப்பிடப்பட்ட நியமங்களுக்கு அமைவாக தரமான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படாமையும், அபிவிருத்திப் பணிகளை கண்காணிக்க வேண்டிய அரச திணைக்களங்கள் உரிய முறையில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமையுமே இவ்வாறான நிலைமைகளுக்கு காரணம் எனவும், இவற்றை ஒழுங்குபடுத்த வேண்டிய மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவும் அக்கறையின்றி இருப்பதுவுமே அபிவிருத்தியின் போது முறைகேடுகள் இடம்பெறுவதற்கு காரணம் என்றும் பொதுமக்கள் தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பிரதேசசபை செயலர்கள்,தவிசாளர்களுடன் வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் சந்திப்பு



யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் செயலாளர்கள் மற்றும் தவிசாளர்களுக்கும் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. பிரதேச சபைகளின் கடந்தகால நிகழ்கால மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ். பாதுகாப்பு படைக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் எண்ணக் கருவுக்கமைய, யாழ். பாதுகாப்பு படை 2ஆம் நிலைத் தலைமை அதிகாரி தலைமையில் போசத் சமாஜ சத்க்கார அமைப்பு திலக்கசிறி மற்றும் ரவிந்திர திசாநாயக்க வின் நிதி உதவியுடன் யாழ். தொல்புரம் ஏ.எம்.ரி.எம் வித்தியாலயம், தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம், சுழிபுரம் வித்தியாலயம், மூளாய் சைவப்பிரகாசா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் 250 பேருக்கு கடந்த சனிக்கிழமை பாடசாலை உபகரணங்கள் காக்கைதீவு மற்றும் தொல்புரம் சன சமூக நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டன.



இந்நிகழ்வில் இராணுவ உயர் அதிகாரிகள், படையினர், மற்றும் பிரதேச மக் கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## இணுவில் கந்தசுவாமி கோவிலில் உலகப் பெரு மஞ்சம் வீதியுலா



இணுவில்,ஜன.23

தைப்பூசத் திருநாளை முன்னிட்டு யாழ்ப்பாணம் இணுவில் அருள்மிகு கந்தசுவாமி கோவிலில் உலகப்பெரு மஞ்சம் நேற்றுமுன்தினம் வீதியுலா வந்தது.

வள்ளி, தெய்வானை சமேத ஆறுமுகப்பெருமான் மஞ்சத்தில் பவனி வந்தார்.

இதனைக் காண்பதற்காக அடியவர்கள் பலர் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் இணுவையம்பதி வந்து சேர்ந்தார்கள்.

அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன், கலை நேர்த்தியுடன் கட்டப்பட்ட உலகப்பெருமஞ்சம், இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்தில் அமைந்திருப்பது இந்துக்களுக்கு சிறப்பாகும்.

வருடத்தில் தைப்பூசம் மற்றும் வருடாந்த மகோற்சவத்தின் 12ஆம் திருவிழா ஆகிய இரண்டு தினங்களில் உலகப்பெருமஞ்சம் வீதியுலா வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

### விபுலாநந்தர் அழகியற் கற்கைகள் நிறுவக

## உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூ.300 மில். இந்திய நிதியுதவி

கிழக்கு பல்கலைக்கழகத்தின், சுவாமி விபுலாநந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் உட்கட்டமைப்பு வேலைகளின் அபிவிருத்திக்காக இந்திய தூதரகத்தினால் 30 கோடி ரூபாய் நிதியுதவி வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலை மையில் திங்கட்கிழமை (21) உயர் கல்வி அமைச்சில் நடைபெற்றது.



அமைச்சர் ரவூப் ஹக்கீம் முன்னிலையில், இந்தியத் தூதுவர் ட்ரன்ஜித் சிங் சந்து மற்றும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னெ ஆகியோர் இந்த இரு தரப்பு உடன்படிக்கையை கைச்சாத்திட்டனர். இதன்போது சுவாமி விபுலாநந்தர் அழகியல் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஜெயசங்கரும் பிரசன்னமாகி இருந்தார்.

அங்கு அமைச்சர் ஹக்கீம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்;

கிழக்கு பல்கலைக்கழகத்தின், சுவாமி விபுலாநந்தர் அழகியல் நிறுவகத்திற்கான உட்கட்டமைப்பு வேலைகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினால் 30 கோடி ரூபாய் நிதியுதவி வழங்குவதன் மூலம் புதிய கேட்போர் கூடமொன்றும், நவீன ஒலி, ஒளி தொழில்நுட்ப கலையகமொன்றும் அமைக்கப்படுவதுடன், நான்கு வாகனங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

மட்டக்களப்பு, கல்லடியில் அமைந்துள்ள இந்த நிறுவகமானது இயல், இசை, நாடகம் தொடர்பான கற்கை நெறிகளை பல்கலைக்கழக பாடநெறிகளாக உள்ளடக்கி மிகவும் திறன் வாய்ந்ததாக நீண்ட காலமாக செயற்பட்டு வருகின்றது.

நாடகமும் அரங்கியலும், கர்நாடக இசை, பரத நாட்டியம் மற்றும் கற்புல தொழில்நுட்பக் கலைகள் ஆகிய நான்கு பட்டப்படிப்புகளை போதித்துவரும் இந்நிறுவகம், புதிதாக தமிழர் ஆடல் மரபுகள், தமிழர் இசை மரபுகள் ஆகிய புதிய பாடத்திட்டங்களையும் அறிமுகப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. இந்த நிறுவனம் வருடாந்தம் 230 மாணவர்களுக்கு புதிய அனுமதி வழங்கி வருகின்றது.

இந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மேம்பாட்டுக்காக இந்திய தூதரகத்தின் மூலம் கிடைக்கப்பெறுகின்ற இந்த நன்கொடையின் மூலம் பிரஸ்தாப துறையை மேம்படுத்த ஒத்துழைப்பு நல்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழகத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் காலவரையறையற்ற வேலைநிறுத்தம்

சென்னை,ஜன.23

தமிழகம் முழுவதும் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள்பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிறார்கள். 2003ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதிக்கு பிறகு அரசுப் பணியில் சேர்ந்தவர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தையே அமுல்படுத்த வேண்டும், இடைநிலை ஆசிரியர்களுக்கு மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பான ஜாக்டோ – ஜியோ வலி



யுறுத்தி வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் வேலைநிறுத்த போராட்டத்திலும் ஈடுபட முயன்றனர்.

அதை எதிர்த்து, மதுரை உயர்நீதிமன்றில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. அப்போது, நீதிபதிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் வேலைநிறுத்த போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

தங்களது கோரிக்கைக்கு அரசு செவி சாய்க்கவில்லை என்று கூறி, கைவிடப்பட்ட வேலைநிறுத்த போராட்டத்தை நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் தொடங்க இருப்பதாக ஜாக்டோ – ஜியோ அமைப்பினர் அறிவித்து இருந்தனர். இதன்படி, ஜாக்டோ – ஜியோ அமைப்பினரின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று தொடங்கியது.

## அரசியலில் ஈடுபடும் எண்ணம் கிடையாது என்கிறார் அஜித்



சென்னை,ஜன.23

எனக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசியல் ஈடுபாட்டில் எந்த ஆர்வமும் இல்லை என தெரிவித்துள்ளார் நடிகர் அஜித்.

சமூக வலைத்தளங்களில் அஜித் அரசியலில் ஈடுபட இருக்கிறார் என கூறப்பட்டது. இதையறிந்த அஜித் தற்போது அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

எனக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசியல் ஈடுபாட்டில் எந்த ஆர்வமும் இல்லை. ஒரு சராசரி பொது ஜனமாக வரிசையில் நின்று வாக்களிப்பது மட்டுமே எனது உச்சக்கட்ட அரசியல் தொடர்பு. நான் என் ரசிகர்களை குறிப்பிட்ட ஓர் கட்சிக்கு ஆதரவு அளியுங்கள் என்றோ, வாக்களியுங்கள் என்றோ எப்பொழுதும் நிர்ப்பந்தித்தது இல்லை, நிர்ப்பந்திக்கவும் மாட்டேன். நான் சினிமாவில் தொழில் முறையாக வந்தவன். நான் அரசியல் செய்யவோ, மற்றவர்களுடன் மோதவோ இங்கு வரவில்லை. என் ரசிகர்களுக்கும், அதையேதான் நான் வலியுறுத்துகிறேன். அரசியல் சார்ந்த எந்த ஒரு வெளிப்பாட்டை நான் தெரிவிப்பதில்லை.

அரசியலில் எனக்கும் தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு உண்டு, அதை நான் யார் மீதும் திணிப்பது இல்லை, மற்றவர்கள் கருத்தை என் மேல் திணிக்க விட்டதும் இல்லை. என் ரசிகர்களிடம் இதையேதான் நான் எதிர்பார்க்கிறேன். உங்கள் அரசியல் கருத்து உங்களுடையதாகவே இருக்கட்டும். என் பெயரோ, என் புகைப்படமோ எந்த ஓர் அரசியல் நிகழ்விலும் இடம்பெறுவதை நான் சற்றும் விரும்புவதில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

## நாட்டை வழிநடத்தும் தகுதி மம்தா பானர்ஜிக்கு உள்ளது

### குமாரசாமி நற்சான்று



கொல்கத்தா,ஜன.23

நாட்டை வழிநடத்தும் அனைத்து தகுதிகளும் மம்தா பானர்ஜிக்கு இருக்கிறது என்று கர்நாடக முதலமைச்சர் குமாரசாமி கூறினார்.

இது தொடர்பில் குமாரசாமி நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் தெரிவித்தவை வருமாறு –

தலைமையை முடிவு செய்வது தேர்தல் வெற்றிக்கு ஓர் அளவுகோல் இல்லை. பிரதமர் நரேந்திரமோடி அரசின் நிர்வாகத்தின் மீது நாட்டு மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். பல மாநிலங்களிலும் அவர்களது சொந்த பிரச்சினைகள் உள்ளன. எனவே தேர்தலுக்கு முன்பு தலைவரை தேர்வு செய்யவேண்டிய அவசியம் இல்லை.

நாட்டின் முன்னேற்றத்துக்கு மிகப்பெரிய திட்டங்களை கொண்டுள்ள வலுவான தலைவர்கள் இருக்கிறார்கள். இப்போதைய அரசு தோல்வியடைந்த திட்டங்களில் அவர்கள் முன்னேற்றம் காணச்செய்வார்கள். தேர்தல் முடிந்த பின்னர் நாங்கள் கூடி தலைவரை தேர்வு செய்வோம். இதில் எந்த பிரச்சினையும் இல்லை. 1977ஆம் ஆண்டில் பிரதமர் இந்திரா காந்திக்கு எதிராக நாடு முழுவதும் கிளர்ச்சி ஏற்பட்டது போன்ற சூழ்நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

மம்தா பானர்ஜி மிக எளிமையாகவும், மிகச் சிறந்த நிர்வாகியாகவும் இருக்கிறார். அவருக்கு இந்த நாட்டை தலைமை தாங்கி வழிநடத்தும் அனைத்து தகுதிகளும் இருக்கின்றன என நான் நம்புகிறேன். அவர் ஏற்கனவே மேற்கு வங்காளத்திற்குத் தலைமை தாங்கி வழிநடத்தி இதனை நிரூபித்து இருக்கிறார் – என்றார்.

## இமாச்சலத்தில் பள்ளத்தாக்கில் பயணிகள் பேருந்து கவிழ்ந்தது




சிம்லா, ஜன. 23

இமாச்சல பிரதேசம் சுர்காத் பகுதியின் அருகே மலைப் பாங்கான பாதையில் சென்ற பேருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்ததில் 26 பேர் படுகாயமுற்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த பகுதி இமாச்சல பிரதேசம் ஆகும். இம்மாநிலத்தின் பிலாஸ்பூர் மாவட்டத்தில் உள்ள சுர்காத் பகுதியின் அருகே நேற்று காலை சுற்றுலா பேருந்து சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராதவிதமாக பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, பக்கவாட்டில் சறுக்கி பள்ளத்தாக்கில் விழுந்தது.

இவ்விபத்தில் 26 பேர் படுகாயமுற்றனர் எனவும் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

## ரூபா 8,100 கோடி மோசடி செய்து விட்டு வெளிநாட்டுக்கு தப்பிய தொழில் அதிபர்கள்

புதுடில்லி,ஜன.23

ரூ.8,100 கோடி மோசடி செய்துவிட்டு, வெளிநாட்டுக்கு தப்பி ஓடிய 4 தொழில் அதிபர்களை நாடு கடத்தி அழைத்துவர நடவடிக்கை தொடங்கப்பட்டு இருப்பதாக அமுலாக்கப்பிரிவு தெரிவித்தது.

குஜராத்தை சேர்ந்த முன்னணி மருந்து நிறுவனம் ஸ்டெர்லிங் பயோடெக் லிமிடெட் ரூ.8 ஆயிரத்து 100 கோடி வங்கிக்கடன் மோசடி செய்தது தொடர்பாக, அந்த நிறுவனத்தின் அதிபர்கள் நிதின் ஜெயந்திலால் சந்தேசரா, சேத்தன் குமார், தீப்தி சேத்தன், ஹிதேஷ்குமார் நரேந்திர பாய் படேல் ஆகியோருக்கு எதிராக சட்டவிரோத பண பரிமாற்ற தடை சட்டத்தின் கீழ், அமலாக்கப்பிரிவு வழக்கு பதிவு செய்தது.

டில்லியில் உள்ள கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றில் இவ்வழக்கு விசாரணை நடந்து வருகிறது. 4 பேர் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்களின் சில சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. நீதிமன்றம், காலவரையற்ற பிடியாணை பிறப்பித்துள்ளது.

## பா.ஜ.கவில் இணையுமாறு அஜித்தை அழைக்கவில்லை

### தமிழிசை சவுந்தரராஜன் தெரிவிப்பு

சென்னை,ஜன.23

பா.ஜ.கவில் சேருமாறு நடிகர் அஜித்குமாரை அழைக்கவில்லை என்று தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த தமிழக பாஜக தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கூறுகையில் –

பாஜகவில் சேருமாறு நடிகர் அஜித்குமாரை அழைக்கவில்லை. இளைஞர்கள் எல்லோரும் அரசியலில் ஈடுபடுவது தவறல்ல. பாராட்டுக்குரிய அறிக்கையை நடிகர் அஜித்குமார் வெளியிட்டுள்ளார்.

நான் மருத்துவராக இருந்த போது ஒரு குழந்தையின் அறுவை சிகிச்சைக்கு அஜித்குமார் உதவி செய்தார். பிற நடிகர்களைப்போல் அல்லாமல் நடிகர் அஜித்குமார் தனது நிலையை தெளிவுபடுத்தியுள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.





# பாகிஸ்தானில் டீசல் லொறியுடன் பயணிகள் பஸ் மோதி விபத்து

## 26 பேர் பரிதாபகரமாக கருகிச் சாவு



குவெட்டா,ஜன.23

பாகிஸ்தானில் உள்ள பலூசிஸ்தானில் பேருந்து ஒன்றின் மீது டீசல் லொறி மோதி தீப்பிடித்த விபத்தில் 26 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் கராச்சியில் இருந்து, பலூசிஸ்தான் மாகாணம் பஞ்சக்ர் பகுதிக்கு நேற்று முன்தினம் இரவு பயணிகள் பேருந்து சென்று கொண்டிருந்தது. இந்த பேருந்தில் சுமார் 40 பயணிகள் பயணித்துள்ளனர். பலூசிஸ்தானின் தொழில் நகரமான ஹப் அருகே சென்றபோது, எரிபொருள் ஏற்றி வந்த லொறியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

எதிரே வந்த உழவு இயந்திரத்தில் ஈரானிய டீசல் இருந்ததால் விபத்தின்போது பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. பயணிகள் தங்கள் உயிரை காப்பாற்ற பேருந்தில் இருந்து தப்பிக்க முயன்றனர். ஆனால், தீப்பிழம்புகள் பேருந்தில் வேகமாக பரவியதால் வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர்.

இந்த துயரச் சம்பவத்தில் இதுவரை 26 பேர் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும், தொடர்ந்து மீட்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன என்றும் லாஸ்பேலா துணை ஆணையாளர் பீர் மெங்கல் தெரிவித்துள்ளார்.

மேலும் 16 பேர் படுகாயத் துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 6 பேர் கவலைக் கிடமான நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாப்பரசருடன் பிரார்த்தனை புதிய செயலி அறிமுகம்



வத்திக்கான்,ஜன.23

பாப்பரசருடன்பிரார்த்தனை செய்ய புதியசெயலி அறிமுகம் செய்யப்பட்டது.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸ் உலக அமைதி வேண்டியும், இயற்கை பேரிடரால் பாதிக்கப்படும் நாட்டின் மக்களுக்காகவும் அவ்வப்போது பொது பிராத்தனை நடத்துவார். இது போன்ற நிகழ்வுகளின்போது பாப்பரசருடன் இணைந்து தாங்களும் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும்என்பது கோடிக்கணக்கான கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் விருப்பமாக உள்ளது.

அதே சமயம் நடைமுறையில் இது சாத்தியமற்றதாக இருந்தது. ஆனால் தொழில்நுட்ப உதவியின் மூலம் கோடிக்கணக்கான மக்களின் விருப்பம் தற்போது சாத்தியமாகி உள்ளது.

அதாவது, தன்னுடன் பிரார்த்தனை செய்வதற்காக பிரத்யேகமான புதிய செயலி ஒன்றை பாப்பரசர் அறிமுகம் செய்துவைத்துள்ளார்.

'கிளிக் டூ பிரே' என்கிற அந்த செயலி மூலம் பாப்பரசர் எதற்காக? எப்போது? பிரார்த்தனை செய்யப்போகிறார் என்பதை மக்கள் அறிந்துகொள்ள முடியும். எனவே இதன் மூலம் மக்கள் எளிதில் பாப்பரசருடன் இணைந்து பிரார்த்தனையில் கலந்துகொள்ள முடியும்.

# ரஷ்ய கடல் பகுதியில் பற்றி எரியும் இரண்டு எரிபொருள் கப்பல்கள்

## பதினொரு பேர் உயிரிழப்பு



மொஸ்கோ,ஜன.23

ரஷ்ய கடல் பகுதியில் 2 எரிபொருள் கப்பல்கள் தீ பிடித்து விபத்துக்குள்ளாகின. இதில் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்துக்குள்ளான 2 கப்பல்களிலும் தான்சானியா நாட்டுக் கொடி பறந்துள்ளது. ஒரு கப்பலில் திரவ இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி.) இருந்திருக்கிறது. மற்றொரு கப்பலில் வெறுமையான தாங்கி இருந்துள்ளது. ஒரு கப்பலில் இருந்து மற்றொரு கப்பலுக்கு எரிபொருள் மாற்றம் செய்தபோது தீ விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

கேண்டி என்ற பெயர் கொண்ட ஒரு கப்பலில் 17 பேர் இருந்துள்ளனர். அவர்களில் 8 பேர் இந்தியர்கள். ஏனையோர் துருக்கி நாட்டை சேர்ந்தவர்கள். விபத்துக்குள்ளான இன்னொரு கப்பலின் பெயர் தி மேஸ்ட்ரோ.

அதில் 15 பேர் இருந்தனர். அவர்களில் துருக்கி நாட்டை சேர்ந்தவர்கள் 7 பேர். இந்தியாவை சேர்ந்தவர்கள் 7 பேர். இதேபோன்று லிபியா, ரஷ்யாவை சேர்ந்தவர்களும் தி மேஸ்ட்ரோவில் இருந்துள்ளனர்.

தீ விபத்தில் மொத்தம் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்து நடந்த இடத்தில் மோசமான வானிலை காணப்படுவதால் உயிரிழந்தவர்களின் உடல்களையும், கப்பலில் சிக்கித்தவிப்பவர்களையும் மீட்பதில் சிக்கல் நிலவுவதாகவும், வானிலை சாதகமாகும் போது மீட்பு பணிகளை தொடங்குவதற்காக ரஷ்ய கடலோர பாதுகாப்பு படை மற்றும் விமானங்கள் தயார் நிலையில் உள்ளன என்றும் செய்திகள் கூறுகின்றன.

# இந்தோனேஷியாவில் பெரும் நிலநடுக்கம்

ஜகார்த்தா,ஜன.23

இந்தோனேசியாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் மக்கள் பீதியில் ஆழ்ந்துள்ளனர்.

பல்வேறு தீவுகளைக் கொண்ட இந்தோனேசியாவில் அடிக்கடி பூகம்பம் ஏற்பட்டு வருகிறது. சமீபத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக 1.5 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து விழுந்தன. ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் இந்தோனேசியாவின் சும்பாவா கடல் பகுதியில் நேற்று அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுக்கோலில் 6.1 ஆக பதிவாகியுள்ளது. நிலநடுக்கம் குறித்த சேதாரங்கள் பற்றி இன்னும் தகவல்கள் வெளியாகவில்லை. இதனால் மக்கள் கடும் பீதியில் ஆழ்ந்துள்ளனர்.

# அமெ. ஜனாதிபதி தேர்தலில் கமலா ஹாரிஸ் போட்டி



வொஷிங்டன்,ஜன.23

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் போட்டியிட உள்ளார்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவை சேர்ந்த செனட் சபை உறுப்பினர் கமலா ஹாரிஸ் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அவருக்கு வயது 54. குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் 4 ஆவது பெண் கமலா ஹாரிஸ் ஆவார்.

## வெனிசுலாவில்

# கிளர்ச்சியில் ஈடுபட்ட இராணுவ வீரர்கள் அதிரடியாக கைது



காரகாஸ், ஜன. 23

வெனிசுலாவில் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட இராணுவ வீரர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர்.

ஜனாதிபதி மதுரோவுக்கு எதிராக, ராணுவத்தைச் சேர்ந்த ஒரு குழுவினர் கிளர்ச்சியில் ஈடுபட்டதுடன் மதுரோவுக்கு எதிராக தங்கள் போராட்டத்துக்கு பொது மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என அழைப்பு விடுத்தனர். இது தொடர்பாக சமூக வலைத்தளத்தில் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளனர்.

அதில் பேசிய ஒருவீரர், 'தேசிய பாதுகாப்பு படையைச் சேர்ந்த நாங்கள் அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளோம். எனவே, உங்கள் உதவி தேவை. தெருவில் இறங்கி போராட்டம் நடத்துங்கள்' என கேட்டுக்கொண்டார்.

இந்த வீடியோ வெளியான சில மணி நேரங்களில், சம்பந்தப்பட்ட வீரர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். வடக்குகாரகாசில் உள்ள கோட்டிஷா பகுதியில் உள்ள முகாமில், கிளர்ச்சியில் ஈடுபட முயன்றபோது அவர்களை பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் சுற்றி வளைத்து கைது செய்துள்ளனர். இத்தகவலை பாதுகாப்புத்துறை அமைச்சர் விளாடிமிர் பத்ரினோ தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட வீரர்களிடம் இருந்து திருட்டு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்றும், கிளர்ச்சியாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். ஆனால் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

கிளர்ச்சியாளர்கள் கோட்டிஷா முகாமுக்குச் செல்லும் முன்பு, பெட்டாரே பகுதியில் உள்ள முகாமில் இருந்து ஆயுதங்களை திருடிச் சென்றனர் என்றும், 4 வீரர்களை கடத்திச்சென்றனர் என்றும் ராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மண்ணில் வியத்தகு சேவையாற்றி பெருமை சேர்த்த சாதனையாளன்!

## போர்க்கால அவலத்திலும் சளைக்காது அளப்பரிய சேவை



கிராம சேவையாளர்
**தில்லை நடராசா**

வைரமுத்தாபிள்ளை தில்லைநடராசா 1976 ஆம் ஆண்டு பெப்ரவரி 08 ஆம் திகதி அரசாங்க சேவையில் எழுதுவினைஞராக இணைந்து கொண்டார். அந்தப் பணியில் சுமார் மூன்றரை வருடங்கள் பணியாற்றிய அவர் 1979 ஆம் ஆண்டு இறுதியில் (27.11.1979) கிராம சேவையாளராக பணியை ஆரம்பித்தார்.

அன்றிலிருந்து 23.01.2009 வரையான மிகவும் சோதனையான – நெருக்கடிமிக்க – வலிமிகுந்த காலகட்டத்தில் அவர் பணியாற்றியுள்ளார்.

தில்லைநடராசா மயிலிட்டி வடக்கு (ஜே/72) கிராம சேவையாளராக பணியை ஆரம்பித்து தொடர்ந்து உடுவில் (ஜே/94), யாழ். பெரிய கடை (ஜே/80), யாழ். கோட்டை (ஜே/81) அராலி மேற்கு (ஜே/160), யாழ் சிறாம்பியடி (ஜே/79) ஆகிய பிரிவுகளில் சேவை புரிந்துள்ளார்.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாணம் இடம்பெயர்வை அடுத்து அந்த அவலம் மிகுந்த வேளையிலும் சாவகச்சேரி, முல்லைத்தீவு, (கரைதுறைப்பற்று) வவுனியா, திருகோணமலை, பிரதேச செயலகங்களில் அவரின் மக்கள் பணி, சேவை தொடர்ந்தது.

மக்கள் சேவகனாக விளங்கிய தில்லைநடராசா பணியாற்றிய அந்தக் கொடும் காலம் குறித்து எழுத்தில் வடிக்க முடியாது. யாழ் குடாநாடு மட்டுமன்றி, முழு தமிழர் தேசமும் மக்களும் அனுபவித்த சொல்லொணாத் துயரங்கள், வேதனைகள் ஏராளம்.

போர் சூழ்ந்த அந்தக் காலகட்டத்தில் அரச அதிகாரிகள், பணியாளர்கள், கல்விச் சமூகத்தினர் முதல் தனியார் துறையினர், வர்த்தகர்கள் என அனைத்துத் தரப்பினரும் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியாற்றினார். அவ்வேளையில் கிராம சேவையாளர்களின் கடமை முக்கியத்துவம் பெற்றிருந்தது.

போரினால், இயற்கை அழிவுகளால் மற்றும் பல்வேறு அனர்த்தங்களினாலும் பாதிப்புற்ற பொதுமக்களின் தரவுகள், பதிவுகள் போன்றவற்றை சேகரித்து உரிய அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கும் முக்கிய பணியை அவர்கள் உயிராபத்துக்கு மத்தியில் ஆற்றவேண்டியிருந்தது.

அவ்வேளையில் மக்கள் சேவைகளை தில்லைநடராசா இரவு பகல் பாராது பண்டிகைகள், விடுமுறைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு ஓய்வின்றி பணி புரிந்தமையை இன்னும் மக்கள் நினைவு கூர்ந்த வண்ணம் உள்ளனர்.

கிராம சேவையாளர் தில்லை நடராசா பணியாற்றிய வருடங்களில் அநேகமான வருடங்கள் போர், அனர்த்தங்கள், இயற்கை அழிவுகள் நடந்த காலப் பகுதியாகும். இக்கால கட்டத்தில் அவர் ஆற்றிய மக்கள் பணி, தொண்டுகளை எழுத்தில் வடிக்க முடியாது.

அவரது சிறப்பான, சுறுசுறுப்பான சேவையை அதிகாரிகள் மட்டுமன்றி, சகாக்களான கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் வியப்புடன் நோக்குவர். ஊர் மக்கள் மற்றும் பொது அமைப்புகள், சனசமூக நிலையங்கள், அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற 'கடமை வீரன்', 'மக்கள் காவலன்' போன்ற கௌரவ பட்டங்களை வழங்கிக் கௌரவித்தன.

**நூலாசிரியரும் கூட**

நேர காலம் பாராது ஓடியோடி மக்களுக்குப் பல வழிகளிலும் உதவிய அவருக்குக் கடமை நேரம் என்றில்லை. எந்த வேளையிலும் அவரின உதவியைப் பெறலாம். முகச்சுழிப்பு இல்லாமல் செயற்பட்டவர் அவர்.

தில்லை கிராம அலுவலராகச் செயற்பட்டுக் கொண்டு, நூல்கள் சிலவற்றையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றில் "யாழ்ப்பாணம் சிராம்பியடி", "அவலத்தில் சோதனை, வேதனை, சாதனை", "இடரினும் தளராத பயணங்கள்" ஆகிய நூல்கள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை. 'யாழ்ப்பாணம் சிராம்பியடி' 160 பக்கங்களைக் கொண்டது. சிராம்பியடி கிராம சேவையாளர் பிரிவைப் பற்றிய இந்த ஆய்வுக் கட்டுரையில் 'கிராம்பியடி' என்னும் பெயருக்குக் காரணம், சிராம்பியடியின் பொதுக் கட்டுமானங்கள், அமைவிடம், கல்வி, கலாசார – வணிக நிறுவனங்கள், இப்பிரதேசத்தின் உயர்வுக்கான பணியாற்றியோர், இப்பிரிவில் உள்ள மக்களின் இயல்பு நிலையும் போன்ற தகவல்களை புள்ளி விவரங்கள், ஆதாரங்களுடன் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

'சிராம்பியடி செதுக்கிய சிற்பிகள்' என்ற உப தலைப்பில் ஊர்ப் பெரியோர்கள், சமூகத் தொண்டர்கள், கல்விமான்கள், வர்த்தகப் பிரமுகர்கள் பற்றி நூலாசிரியர் விவரித்துள்ளார்.

தொல்புத்திரன் எனும் புனைபெயரில் 'இடரினும் தளராத பயணங்கள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட தில்லைநடராசாவின் நூலைப் பாராட்டி அவ்வேளை மல்லாகம் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய ச. இளங்கோவன் வழங்கிய பாராட்டுப் பத்திரம் இது:

*போர் அனர்த்தங்களினால் பலவித இன்னல்களையும் ஒவ்வொரு குடிமகனும் பாகுபாடின்றி அனுபவித்துக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் ஒரு கிராம சேவகர் என்ற பதவியை பல இடங்களிலும் பல இடர்களுக்கு மத்தியிலும் செய்யப்பட்டு, தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகமும் என்ற கண்ணோட்டத்தில், இலக்கிய சுவையுடன், தகுந்த ஆவண நிரூபித்தலுடன் வெளிக்கொணர்ந்தமை உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியதாகும். இந்த சேவை ஏனைய அரச உத்தியோகத்தர்களாலும் அவர் எந்த உத்தியோகத்திலிருந்தாலும் பின்பற்றப்பட வேண்டியதாகும்.*

*இக்கால கட்டத்தில், கிராமசேவகர் பதவி என்பது சிக்கல்கள், சோதனைகள், வேதனைகள், நிரம்பியது. கடந்த காலங்களில் பரம்பரை பரம்பரையாக விதானையார் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பல வசதிகளுடன் கடமையாற்றி வந்தனர். அந்தக் கால கட்டத்தில் எல்லாமே ஓர் ஒழுங்கில் இருந்தபடியால், இவர்களது சேவை ஒரு வரையறைக்குட்பட்டதாகவே இருந்தது.*

*ஆனால், பின்னர், பல கிராம சேவகர்களும் அடிக்கடி இடமாற்றத்திற்கு உள்ளாவதும் சில கிராம சேவகர்கள், ஒரே நேரத்தில் பல பிரிவுகளைக் கவனிக்க வேண்டியவர்களாகவும் இருந்து வருகின்றனர். சில கிராம சேவகர்கள் சேவைக்காலத்திலேயே பலவந்தமாக உயிர் பறிக்கப்பட்டும் போர்க்கால அனர்த்தம் காரணமாக கிராமசேவகர்களும் சில மேலதிக கடமைகளையும் மேற்கொள்ளப்பட வேண்டியவர்களாக இருந்துள்ளனர். சில கிராம சேவகர்கள் உயிராபத்து காரணமாக நாட்டைவிட்டு ஓடியவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை நமது காலத்தில் அறிந்துள்ளோம்.*

*இந்த எழுத்தாளனின் சேவைக்காலத்தில் இயற்கை அனர்த்தமும் ஏற்பட்டது. எனவே இலவச நிவாரணம், வெள்ள நிவாரணம், அழிவு நிவாரணம், விசேட அடையாள அட்டை படிவங்கள், விநியோகித்தல், சரி பார்த்தல், பெறல், நீதிமன்ற கட்டளைகள் பிடியாணைகளை அறிவித்தல் நிறைவேற்றல், சடுதி மரணங்களை அறிவித்தல் போன்ற பல கடமைகளைச் செய்யக்கடமைப்பட்டிருந்தனர். நாளின் 24 மணி நேரமும் கடமையில் இருந்தாக வேண்டும்.*

*இந்த கடமைகளை எல்லாம் ஒரு சேவையாகவும், சவாலாகவும் ஏற்று ஒரு சிறந்த கடமைவீரனாக, ஒரு தலை சிறந்த மகனாக, ஒரு கணவனாக ஒரு தந்தையாக ஓர் உறவினராக தனக்கு வழங்கப்பட்ட பாத்திரத்தை செவ்வனே செய்துள்ளார் என்பது இந்நூலைப் படிப்பவர்களுக்கு நன்கு புரியும். தனது கடமையினை தன்னுடைய மதிநுட்பத்தாலும், மும்மொழிப் புலமையினாலும் திறம்பட செய்துள்ளார்.*

*எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல், தனது பெறுமதி மிக்க அனுபவங்களை இலக்கிய சுவையுடன், நூல் வடிவில் உருவாக்கியமை உண்மையிலேயே பாராட்டுக்குரியது. தான் கடமையாற்றி ஒரு பெரிய விசேட பார்வையில் நூலுருவாக்கியமை ஒரு சிறந்த வழிகாட்டல். இவர் வழியில் பலரும் இப்படியான ஆக்கங்களை ஆவணப் படுத்துவது எமது எதிர்காலச் சந்ததியினருக்கு பெரும் பயனுடையதாகும்.*

*இந்த கிராமசேவகர் மேலும் பல ஆக்கங்களை வெளியிடவும் நீண்ட ஆயுள் பெறவும் எனது வாழ்த்துகள்.*

– இவ்வாறு அந்தப் பாராட்டுப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார் நீதிபதி ச. இளங்கோவன்.

**தில்லைநடராசா ஆற்றிய தீரப்பணி போதனா வைத்திய சாலைப் பிரேதங்களை அடக்கம் செய்தமை.**

இது இவ்வாறிருக்க, போர் உக்கிரம் அடைந்திருந்த அந்த வேளையில், 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத் தமிழர்களின் வாழ்க்கை வரலாற்றில் புதிய திருப்பத்தைக் கொண்டு வந்த நாள்.

யாழ்ப்பாணத்தை நோக்கி சிங்கள இராணுவம் பெரிய எடுப்பில் முன்னேறத் தொடங்கிய வேளை அது. அவ்வேளையில் மக்கள் அனுபவித்த சோதனைகள், வேதனைகள், துன்ப துயரங்கள் இங்கு விவரிக்க முடியாது. அதை அனுபவித்தவர்களுக்குத் தான் புரியும்.

இக்கால கட்டத்தில் கிராம சேவையாளராக தில்லை நடராசா செய்த பொது நலப் பணிகள் ஏராளம், ஏராளம். அவரின் தியாகம் மிகுந்த செயல்கள், கடமைப் பணிகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

நெருக்கடிமிக்க வேளை அவர் ஆற்றிய துணிகரமான சேவைகளை கூறுவதாயின், பல நூறு பக்கங்கள் கொண்ட நூலையே வெளியிட்டு விடலாம்.

தில்லையின் அனுபவப் பகிர்வில் ஒரு சம்பவத்தை இங்கு உதாரணமாகக் கூற முடியும் சம்பவம் இதுதான்.

யாழ். போதனா வைத்தியசாலையில் மரண விசாரணை சம்பந்தமான கடமை அழைத்தது. சுற்றி விழும் குண்டுகள், சொந்தக் குடும்பம் இடம்பெயர்ந்து ஓடும் நிலை என்பன பூதாகரமான பிரச்சினைகளாக வந்து இவர்முன் நின்ற போதும் இவர் சிறிதும் கலவரப்பட்டுக் கொள்ளவில்லை.

சவக்கிடங்கில் பல நாள்களாக தேங்கிக் கிடந்த சடலங்கள், இறந்தவர்களின் சடலங்களைச் சவக்கிடங்கில் பராமரிப்பதற்கு ஊழியர்கள் இல்லாத நிலை.

போதனா வைத்தியசாலை தாதியர்கள், ஊழியர்கள் அனைவருமே தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தின் பேரில் ஒரு சிலரைத் தவிர இடம் பெயர்ந்து இருந்தனர். சவக்கிடங்கில் பிரேத நாற்றம் ஒருபுறம், இனம் கண்டு கொள்ள முடியாத அவலத்தில் பல சடலங்கள் ஆங் காங்கே சிதறிக் கிடந்தன. இளம் பெண் பிள்ளைகள், ஆண்கள், வயோதிபர்கள் என்ற வகையில் பல்வேறு சடலங்கள் மனதை உருக்குவதாக இருந்தன. அவ்வேளை இவர் அச்சடலங்களை அடக்கம் செய்துள்ளார். இச்சேவையை செய்வதற்கு மேலதிக அரசாங்க அதிபர் க. குணராசாவால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் வழங்கப்பட்டிருந்தது. அவரது பணிப்பின் பேரில் மரண விசாரணை சம்பந்தமான பணிகளிலும் ஈடுபட்டார்.

'ஐயா சடலங்கள் நாறுவதைப் பார்த்தால் இங்கு ஒருத்தரும் கிட்டப் போகமுடியுமோ என்டது சந்தேகம் தான்" ஒரு காவலாளி தனது அபிப்பிராயத்தை வார்த்தைகளால் வெளியிட்டபடி அப்பால் நகர்ந்து கொள்கிறான்.

இவ்வகையாக 18 சடலங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடந்தன. நவம்பர் மாதம் 1, 3, 6, 8, 10, 11, 12 ஆம் திகதிகளிலே தொடர்ச்சியாக இந்த 18 பிரேதங்களையும் அடக்கம் செய்ய வேண்டிய நிலைமை இவருக்கு ஏற்பட்டது. மட்டுமல்லாமல் எவராலும் இனங்காண முடியாத வகையில் உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட சிவன் சிவனய்யா என்பவரது சடலத்தை இவரால் இனம் காணப்பட்டு அடக்கம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

தனியொரு மரண வீட்டில் நாம் படும் வேதனைகளைச் சொல்லி ஆறிட முடியாத துயரம் எமது நெஞ்சம் முழுவதும் பல காலம் வியாபித்து இருக்கும். ஆனால் தொடர்ந்து பிரேதசங்களுக்குள்ளேயே நின்று அவற்றுக்கான அடக்கம் செய்யும் நிலை பற்றி நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

கண்கள் கசிந்துருகி ....." இறைவனை எம்மவர்க்கு ஏனிந்த நிலை..? – என்று அழுது உருகி... குலுங்கி வெந்து கொள்ள வேண்டிய நிலை. அந்த நிலையில் இறுக்கமான ஒரு மனநிலையினை இவருக்குள் தந்த மனவலிமையினை என்னவென்பது. அந்தக் கடமைகளை திறம்பட செய்ய முடிந்த திடகாத்திரத்தை இவருக்கு இறைவனே அளித்திருக்கிறார். அப்போதிருந்த நிலைமையில் இவரால் அந்த உறுதியான செயலைப் புரிந்திட முடிந்த மன நிலையினை இறைவன் இவருக்கு அளித்திருக்காவிட்டால் இவர் பெரும் துர்ப்பாக்கியசாலியாக இருந்திருப்பார். அந்த வகையில் கடவுளுக்கு நன்றி.

வாய் பேசக்கூடிய மனிதனிடமிருந்தே நாம் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாத இன்றைய சூழ்நிலையில் மூச்சு முழுவதும்; அடங்கி சிதமாகி சடமாய்க் கிடக்கும் பிணத்திடம் எதைப் பற்றித்தான் அறிந்து கொள்ளச் சாத்தியமாயிருக்கும் எனவே ஒவ்வொரு சடலம் பற்றிய விவரம்; அறிந்து கொள்வதற்கும் நிறைய நேரம் தேவைப்பட்டது.

வைத்தியசாலையில் நோய்க்கு அனுமதிக்கப்பட்டு நோய் காரணமாக மடிந்தவர்களினதும் ஷெல், குண்டு, துப்பாக்கி ரவையினால் காயப்பட்டு மரணமாகியவர்களதும் சடலங்கள் அங்கே இருந்தன.

50 வயதைக் கொண்ட சிவானந்தம் என்பவர். இவர் ஒரு குடும்பத்தராய் இருப்பார் என்று கற்பனை மட்டும் தான் செய்ய முடிந்தது. கிட்டத்தட்ட இவருடைய வயதை ஒத்த மனிதர். மனைவி, பிள்ளைகள் பற்றி இறக்கும்போது என்ன நினைத்திருப்பார் என்ற எண்ணத்தில் தோன்றிய அவலம், இடம் தெரியாமல் மறைந்து போகும் அளவுக்கு மனதைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இவ்வாறான எத்தனை, எத்தனையோ சம்பவங்களை எதிர்நோக்கிய தில்லை நடராசா இன்னும் ஓய்ந்துவிடவில்லை. அவரின் சமூக நலன் கொண்ட சேவைகள், தொண்டுகள், பணிகள் இன்றும் தொடர்கின்றன. ★

# ஐ.தே.கட்சிக்குள் மீண்டும் குழப்பம்

## நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை புறக்கணித்த பின்வரிசை எம்.பிக்கள்

கொழும்பு, ஜன. 23

**ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் ஐந்து பேர், கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தைப் புறக்கணித்ததால் கட்சிக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

இதில் கட்டாயம் பங்கேற்குமாறு எம்.பிக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், கட்சிக்கு எவ்வித அறிவிப்பும் விடுக்காமல் இந்தக் கூட்டத்தில் மேற்படி ஐவரும் கலந்துகொள்ளவில்லை.

பின்வரிசை எம்.பிக்களால் முன்வைக்கப்பட்ட யோசனை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இதற்கு எதிர்ப்பை வெளியிடும் முகமாகவே கூட்டத்தைப் புறக்கணித்தோம் என்று ஐ.தே.க. எம்.பியொருவர் கூறினார். (ஐ)

# 71 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாட அரசு ஏற்பாடு

### விசேட அதிதியாக மாலைதீவு ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 23

இலங்கையின் 71 ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுதந்திர தினக் கொண்டாட்டம் காலிமுகத்திடலில் இடம்பெறும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

மாலைதீவு ஜனாதிபதியும் அவரது பாரியாரும் விசேட அதிதிகளாகப் பங்கேற்பார்கள் என அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்தார்.

சுதந்திரக் கொண்டாட்ட பிரதான நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தூதுவர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பங்கேற்பார்கள்.

பெப்ரவரி 3ஆம் திகதி இரவு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பிரித் பாராயணம் இடம்பெறும். பிரதான வைபவத்துடன் இணைந்ததாக மாவட்டமட்டத்திலும் சுதந்திரக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன என்றும் செயலாளர் கமல் பத்மசிறி கூறினார். (ஐ)

# வெள்ளாங்குளத்தில் 500 ஏக்கர் விடுவிப்பு

மன்னார், ஜன. 23

மன்னார், மாந்தைமேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் படையினர் வசம் இருந்த காணிகளில் 500 ஏக்கர் காணிகள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளன என மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 600 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட வெள்ளாங்குளம் பண்ணை படையினர் வசம் இருந்தது. அந்தப் பண்ணையில் 500 ஏக்கர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது என மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் மேலும் கூறினார். (ஐ)



## பிரிட்டன் அமைச்சருடன் மங்கள சமரவீர சந்திப்பு

*லண்டன், ஜன. 23*

ஐ.நாமற்றும் கொமன்வெல்த்துக்கான, பிரிட்டனின் இராஜாங்க அமைச்சர் தாரிக் அகமட் பிரபுவை இலங்கை நிதியமைச்சர் மங்கள சமரவீர சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

லண்டன், வெஸ்ட்மினிஸ்டரில் உள்ள தாரிக் அகமட் பிரபுவின் செயலகத்தில் இந்தச்சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

மனிதஉரிமைகள்மற்றும்நல்லிணக்கம், உள்ளிட்ட ஏனைய விவகாரங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## ஜேர்மன் பெண்கள் இருவர் ஹெரோயினுடன் கைது!

கொழும்பு, ஜன. 23

ஹெரோயின் மற்றும் என்சி என்ற போதைப் பொருள்களுடன் ஜேர்மன் நாட்டு பெண்கள் இருவரை ஹற்றன் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

ஜேர்மன் நாட்டில் இருந்து நுவரெலியாவுக்குச் சுற்றுலா பயணிகளாக வந்த இவ்விரு பெண்களும், வாடகைக் காரொன்றில் நுவரெலியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர்.

அவ்வேளையில் ஹற்றன், மல்லியப்புச் சந்தியில்வைத்து பொலிஸார், அந்தக்காரைச்சோதனை செய்தபோதே அதில் பயணித்த பெண்களிடமிருந்து இருந்து மேற்படி போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.கைதானவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## கல்வியங்காட்டில் வீட்டின் மீது தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 23

முகத்தை மூடிய மறைத்தபடி கல்வியங்காடு பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த, குழுவினர் நேற்றுமுன்தினஇரவு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நான்கு மோட்டார்சைக்கிளில் வந்த 9 பேர் கொண்ட குழுவே தாக்குதல் நடத்தியதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். வீட்டின் யன்னல் மற்றும் கதவுகளை குழு அடித்து நொருக்கியுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பிரியங்கவுக்கான பிடியாணை குறித்து ஏதும் தெரியாது என்கிறது இராணுவம்!

கொழும்பு, ஜன. 23

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக பிரிட்டன் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளமை தொடர்பாக, இலங்கை அதிகாரிகளுக்குத் தகவல்கள் ஏதும் தெரியாது.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டளைச் சட்டத்தின் 5 மற்றும் 4 ஏ பிரிவுகளின்படி, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ குற்றமிழைத்துள்ளார் என்றும், அவரது செயற்பாடுகள், அச்சுறுத்தல் விடுக்கும் வகையில், துன்புறுத்தும் வகையில் அமைந்திருப்பதாகவும் வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் கூறியிருந்தது.

இதற்கமைய, அவரைக் கைது செய்யுமாறும் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இதுகுறித்துஎழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பிரிகேடியர் சுமித் அத்தபத்து, பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடைமுறைகளுக்கு அமைய, முறைப்படி எமக்கு அறிவிக்க வேண்டும்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் ஊடகச்செய்திகள் குறித்து நாங்கள் கவலைப்படவில்லை. எமக்கு உத்தியோகபூர்வ அறிவித்தல் அளிக்கப்பட்டால், சட்டப்படி நாங்கள் செயற்படுவோம் -என்றார்.

## மாகாண சபைத் தேர்தல் தொடர்பில்

# நீதிமன்றை நாடுவதை வரவேற்கின்றார் நஸீர்

கொழும்பு, ஜன. 23

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றத்தை நாடவேண்டிய அவசியம் பற்றி தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நிஸாம் காரியப்பர் உட்பட பலரும் தற்போது வலியுறுத்தியுள்ளனர். தொடர்ந்தும் இந்த விடயத்தில் தேக்க நிலைமை ஏற்படும் பட்சத்தில் நானும் நீதிமன்றத்தை நாடும் நடவடிக்கையை வரவேற்கிறேன்.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் தலைவர்கள் கடந்த வியாழனன்று ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவைச் சந்தித்து மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது மாகாண சபைத் தேர்தலை புதிய முறையில் நடத்த முடியாத நிலைமை உள்ளது. எனவே, பழைய முறைமையில் நடத்தவதே பொருத்தமானது என அவர் கருத்துத் தெரிவித்ததோடு, நீதிமன்றம் உத்தரவிட்டால் நாம் தேர்தலை நடத்த முடியும்.எனவே, இந்த விடயத்தில் யாராவது நீமன்றத்தை நாட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளார்.

அதேவேளை, இந்த நிலைமையை உணர்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலர் நிஸாம் காரியப்பர், எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் தேர்தலை நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



தவறின் அரசில் அங்கம் வகிக்கின்றோம் என்பதற்கு அப்பால் நாம் நீதிமன்றத்தை நாடுவோம் என உறுதிபடக் கூறியுள்ளமையும் வரவேற்கத்தக்கது.

மாகாண சபைத் தேர்தலை தாமதப்படுத்தும் நிலைப்பாடு ஐக்கிய தேசிய கட்சிக்கு தேவைப்படுகின்றது என்ற விமர்சனங்களே அதிகமாக வெளிவருகின்றன. அவற்றுக்குக் கட்டியம் கூறும் வகையில் அதன் செயற்பாடுகளும் இருக்கின்றன.

எனவே, இந்த விடயத்தில் அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைவாகத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

தத்தமது வெற்றிவாய்ப்புகளைக் கருத்தில்கொண்டு செயற்படும் எதுவித நடவடிக்கைகளுக்கும் ஜனநாயகத்தை விரும்பும் எவரும் துணைபோகமாட்டார்கள் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# இன்றைய இலங்கையில் புத்தர் இனவழிப்புக்கான ஓர் ஆயுதம்

## கூறுகிறார் நீதியரசர் விக்னேஸ்வரன்

('தமிழரைத் தொடர்ந்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காகவே புதிய அரசமைப்பு' என்ற தலைப்பில் நேற்றைய காலைக்கதிரில் முதலாம் பக்கத்தில் வெளியாகிய நீதியரசர் விக்னேஸ்வரனின் கேள்வி பதில் அறிக்கையின் மிகுதிப் பகுதி இது.)

தமிழ் மக்கள் சைவர்களாக இருந்து அதன் பின் பௌத்தத்தைத் தழுவி பின்னர் அது வேண்டாம் என்று புறக்கணித்து திரும்பவும் சைவ மதத்தை வந்து சேர்ந்தவர்கள். அவர்களுக்குப் பௌத்தம் என்றால் என்ன என்று தெரியும். அவர்கள் கிறிஸ்தவர்களோ இஸ்லாமியரோ அல்லர். ஆகவே பௌத்தம் பற்றித் தெரிந்தும் திரும்பவும் இந்து மதத்தினுள் (சைவம்) நுழைந்தவர்கள் அவர்கள். ஆகவே வடக்கு–கிழக்கில் வாழும் இந்து தமிழ் மக்களிடம் பௌத்தத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று கூறினால் நீங்கள் வேண்டாம் என்று ஒதுக்கிய மதத்தையே நாம் நாட்டின் முதன்மை மதம் என்று அரசமைப்பில் உள்நுழைக்கப் போகின்றோம் என்று கூறுவதாகவே அதன் அர்த்தம் அமையும்.

தமிழர்கள் சிலர் கூறுகின்றார்கள் அது அரசமைப்பில் இருந்து விட்டுப் போகட்டுமே. எமக்கென்ன நஷ்டம் என்று. பண்டாரநாயக்க தான் பதவிக்கு வர சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்தார். பௌத்த பிக்குகளுக்கு சமய ரீதியான கௌரவத்தை விட சமூகத்திலும் ஒரு மிக முக்கிய பங்கை நல்கினார். விவசாயிகள், மீனவர்கள், சுதேச வைத்தியர்கள், ஆசிரியர்கள், புத்தபிக்குகள் போன்ற ஐவகையானவர்கள் உதவியுடனேயே அவர் பதவிக்கு வந்திருந்தார்.

ஆகவே பிக்குகளின் கோரிக்கைகளைச் செவிசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. அதனால் பல பௌத்த பிக்குகள் தமது சமய ரீதியான முக்கியத்துவத்தை விட சமூக ரீதியான முக்கியத்துவத்தையே எதிர்பார்த்தார்கள். தாம் நினைத்தவாறு பிரதமர் பண்டாரநாயக்க ஆட வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். ஈற்றில் அவர்களாலேயே பண்டா கொல்லவும் பட்டார்.

எனவே எவை எவை எந்த இடத்தில் இருக்கவேண்டுமோ அந்த இடத்தில் இருப்பது தான் அதற்கழகு. நாம் வழி பிறழ்ந்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரு நஷ்டம் ஏற்படும் என்பதற்கு பண்டாவும் பௌத்த பிக்குகளும் உதாரணம்.

### பௌத்தத்துக்கு முன்னுரிமையளித்தால் நடக்கப் போவது என்ன?

இதை ஏன் சொல்கின்றேன் என்றால் நாங்கள் பௌத்தத்திற்கு முதலிடத்தை அரசமைப்பில் இடப்போய், புத்த பிக்குகள் நாடு முழுவதும் இது பௌத்த நாடு, நாங்கள் எங்கு வேண்டுமானாலும் புத்த விகாரைகளைக் கட்டலாம்; புத்தர் சிலைகளை அமைக்கலாம் என்று கூறி வடகிழக்கு மாகாணங்களில் தற்போது அலைந்து திரிகின்றார்கள். அவர்கள் பௌத்தத்தின் மேல் உள்ள அன்பில், மதிப்பில் இதைச் செய்யவில்லை. சிங்கள மேலாதிக்கத்தை உறுதிப்படுத்த இவ்வாறு நடக்கின்றார்கள்.

உள்ளூர் அதிகார சபைகளின் அனுமதி பெறாமலேயே விகாரைகளைக் கட்டவும் அமைக்கவுந் துணிந்துவிட்டார்கள். ஆகவே இருந்து விட்டுப் போகட்டுமே என்று கூறுபவர்கள் வடக்கு–கிழக்கு மாகாணங்கள் முழுவதும் பௌத்த சின்னங்களையும் புத்த விகாரைகளையும் காலக்கிரமத்தில் எதிர்பார்க்கவேண்டும்.

அத்துடன் அது நின்றுவிடாது. விகாரையைச் சுற்றி முதலில் பிக்குமார், அதன்பின் அவர்களின் தாயக்கர்கள் அல்லது புரவலர்கள் வீடுகள் அமைப்பார்கள். குடியிருக்க வருவார்கள். வடகிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் பிரசன்னம் கூடும். எமது தனித்துவம் பறிபோய்விடும். எமது தனித்துவத்தைப் பாதுகாக்கவேண்டுமென்றால் எமது மதங்கள் மற்றும் மொழியானது பாதுகாக்கப்படவேண்டும். ஆகவேதான் பௌத்தத்திற்கு நாடு முழுவதும் முதலிடம் கொடுப்பதை எதிர்க்க வேண்டும்.

நான் பௌத்தத்தை அறிந்தவன். புத்த பெருமானின் கருத்துக்களில் நாட்டம் உள்ளவன். ஆனால் பௌத்தத்திற்கு முதலிடம் கொடுப்பது மதம் பற்றியதல்ல. அது அரசியல். அது ஆக்கிரமிப்பு. அது இனவழிப்பின் தொடர்ச்சி. தேவையெனில் மற்றைய ஏழு மாகாணங்களில் பௌத்தத்திற்கு முதலிடம் கொடுக்கலாம். அங்கு சிங்கள் மக்கள் பெரும்பான்மையோர். பல நூற்றாண்டு காலம் அங்கு வாழ்ந்து வந்துள்ளார்கள். ஆனால் பௌத்தத்தை வேண்டாமென்று கூறி இந்து மதத்தினுள் நுழைந்த ஆதித் தமிழர்கள் வழிவந்த எமது இடங்களில் இவ்வாறான அரசமைப்பு விதிகள் மேலும் எம்மிடையே பிரச்சினைகளை வருங்காலத்தில் ஏற்படுத்துமே ஒழிய திருப்திகரமான தீர்வாக அது அமையாது. ஆக்கிரமிப்பின் மறு வடிவமாகவே அவை அமையும்.

### ஆக்கிரமிப்பாளர்களுக்கு பாதாம் அல்வா கொடுத்த மாதிரி

சிலர் புத்தர் விஷ்ணுவின் ஓர் அம்சம்; அவரின் மதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தால் என்ன? என்கின்றார்கள். இங்கு புத்தரோ, புத்த சமயமோ, புத்த தர்மமோ கேள்விக்குட்படுத்தப்பட வில்லை – அகௌரவப்படுத்தப்படவுமில்லை. அந்த மதத்தை வைத்து ஆக்கிரமிப்பு தேடப் போகும் சில சிங்கள பௌத்தர்களையே நாம் சுட்டிக் காட்டுகின்றோம். அரசமைப்பின் இவ்வாறான ஏற்பாடுகள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு பாதாம் அல்வா கொடுத்த மாதிரி ஆகிவிடும்.

எனவேதான் நாங்கள் வடகிழக்கில் பௌத்தத்திற்கு முதலிடம் வழங்குவதைக் கண்டிக்கின்றோம். புத்தர் வேறு; புத்த மதம் வேறு. புத்தர் இறந்த பின்னரே புத்தமதம் உருவாகியது. இந்துவாகிய அவர் பல இந்திய ஞானிகள் போன்று அவர் கண்ட தர்மத்தைப் போதித்தார். அதை பௌத்த தர்மம் என்று அழைத்தார்கள். இந்து மதத்தில் பௌத்தம் ஒரு பார்வை. ஆனால் இலங்கைத்தீவின் இன்றைய பௌத்த மதத்திற்கு புத்தர் ஓர் ஆயுதம். இனவழிப்புக்கான ஆயுதம்.

### வடக்கு–கிழக்கு இணைப்பு ஏன் வேண்டும்?

இரண்டு, வடகிழக்கு இணைப்பை ஏன் நாங்கள் கோருகின்றோம் என்பதை எம்மவர்கள் அரசுக்குச் சரியாகப் புரிய வைத்தார்களோ தெரியாது. வடக்கும் கிழக்கும் இப்பொழுது கூட பெரும்பான்மையாக தமிழ்ப் பேசும் பிரதேசங்களே. வவுனியாவில் உள்ள எமது சகோதர இனம் நன்றாகத் தமிழ் பேசுவார்கள். அவர்கள் தமிழ் மொழியுடனும் தமிழர்களுடனும் தமிழ்க் கலாசாரத்துடனும் தொடர்புபட்டவர்கள்.

ஆனால் அண்மைக் காலங்களில் முல்லைத்தீவிலும் வவுனியாவிலும் குடியேற்றப்பட்டவர்கள் அப்படியில்லை. துவேஷம் மிக்கவர்கள். தெற்கில் அடிமட்டத்தில் இருந்து வந்தவர்கள். பலர் குற்றவாளிகளாக நீதிமன்றங்களினால் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் காணப்பட்டவர்கள். ஆகவே வட கிழக்கு பிரிக்கப்பட்டால் சிங்கள ஆதிக்கம் பெருகும். வடகிழக்கு இணைக்கப்படாவிட்டால் கிழக்கு மாகாணம் தமிழர்கள் கையில் இருந்து பறிபோய்விடும்.

1881ஆம் ஆண்டில் தமிழர்கள் 60 சதவிகிதமும் முஸ்லிம்கள் 35 சதவிகிதமும் சிங்களவர்கள் 5 சதவிகிதமும் கிழக்கில் இருந்தார்கள். 1946ல் முஸ்லிம் மக்கள் 35ல் இருந்து 39 சதவிகிதத்துக்குப் பெருகினார்கள். தமிழர்கள் 60 சதவிகிதத்தில் இருந்து 54 சதவிகிதத்துக்குக் குறைந்தார்கள். சிங்களவர்களில் மாற்றம் இருக்கவில்லை. 5 சதவிகிதமாகவே இருந்தார்கள்.

முஸ்லிம் மக்களின் பெருக்கம் வழக்கமாகவே மற்றைய இனங்களிலும் பார்க்கக் கூடியதென்பதே இதற்குக் காரணமாக இருக்கக் கூடும். பல் தார மணங்கள் அம்மதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் 1946 தொடக்கம் சிங்கள மக்களின் தொகை மிக விரைவாகப் பெருகத் தொடங்கியது. 1981ல் தமிழர்களின் ஜனத்தொகை 42 சதவீதமாகக் குறைந்தது. முஸ்லிம்களின் சனத்தொகை 32 சதவீதமாகக் குறைந்தது. சிங்களவரின் ஜனத்தொகை 5 சதவிகிதத்தில் இருந்து 25 சத விகிதத்திற்குப் பெருகியது.

இதேவாறு பெருக்கம் நிலைத்திருந்தால் 2031இல் சிங்களவர்கள் ஜனத்தொகை 50 சதவிகிதமாக ஏறியிருக்கும். போர் வந்ததால் அவர்கள் சனத் தொகை குறைந்தது. முஸ்லிம்கள் தொகை 35 சதவிகிதத்திலேயே நின்றது. ஆனால் தமிழரின் சனத் தொகை வருடா வருடம் குறைந்து கொண்டு போகின்றது. ஆகவே வடகிழக்கு இணைப்பு தமிழர்களுக்கு மிக அவசியம் ஆகின்றது. இல்லையேல் அவர்களின் மொழி, காணிகள், அவர்களின் அடையாளங்கள், பாரம்பரியங்கள் எல்லாமே அழிந்து விடுவன.

### முஸ்லிம்களுக்கு மொழி ஒரு பொருட்டல்ல

முன்னர் இலங்கையில் வாழ்ந்த பறங்கியர் இப்பொழுதெங்கே? என் வாழ்நாளிலேயே அவர்கள் இருந்த இடம் தெரியாமல் போயுள்ளார்கள். சிங்களம் வந்ததும் அவர்கள் நாட்டை விட்டுப் போய் விட்டார்கள். ஆனால் முஸ்லிம் சகோதரர்களுக்கு மொழி ஒரு பொருட்டல்ல. அவர்தம் மதமே அவர்களுக்கு முக்கியம். வடகிழக்கு இணைப்பு தமிழர்களுக்கு மிக முக்கியம் என்ற நிலையில் முஸ்லிம் சகோதரர்களும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் மீது கவனமாகவே இருக்கின்றார்கள். அதே நேரம் வடகிழக்கு இணைந்தால் தாங்கள் ஓரங்கட்டப்பட்டு விடுவார்கள் என்ற பயமும் அவர்களுக்கு உண்டு.

மட்டக்களப்பில் ஒரு பகுதியையும், ஊவா மாகாணத்தில் இருந்த பதியத்தலாவ, மகா ஓயா போன்றவற்றின் நிலப்பரப்பையும் உள்ளடக்கியே 1956இல் அம்பாறை என்ற ஒரு மாவட்டம் நடைமுறைக்கு வந்தது. கிழக்கினுள் சிங்கள மக்களை உள்நுழைக்க இது உதவியது. இதனால் கிழக்கின் சிங்கள மக்களின் செறிவு கூடுதலாக்கப்பட்டது.

சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் இணைப்பை சாதகமாகப் பார்ப்பது போல் தெரியவில்லை. அவர்கள் இணைப்பு வேண்டாம் என்பதால் தமிழர்கள் தங்கள் பாரம்பரிய இடங்களை மற்றவர்களிடம் தூக்கிக் கொடுத்து விடமுடியாது. வடகிழக்கில் சிங்கள எகாதிபத்தியம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருவதைக் கண்டும் நாங்கள் கண் மூடிக் கொண்டு இருக்க முடியாது. அதைவிட தமது மதத்தில் கூறியபடி பல்கிப் பெருகிட வேண்டும் என்ற கோரிக்கையை நடைமுறைப்படுத்தும் எமது சகோதர இனப்பெருக்கத்தையும் நாம் அசட்டை செய்ய முடியாது.

### முஸ்லிம்களுக்கு தனி அலகு

இங்கு கூறப்படும் அனைத்தையுமே மனதில் கொண்டால் தமிழ் மக்கள் வடகிழக்கு இணைப்பைக் கேட்பதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளலாம். நாம் எமது கட்சி அடிப்படையில் தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்களுக்கு தனியொரு அலகை உருவாக்கக் கடமைப்பட்டுள்ளோம். தற்போது கிழக்கில் வாழும் சிங்கள மக்கள் தமிழ் அலகுடன் அல்லது முஸ்லிம் அலகுடன் சேரலாம். தமிழ் மொழிக்கே இரு அலகுகளிலும் முக்கியத்துவம் அளிக்கப்படும். முஸ்லிம் தமிழ் அலகுகளுக்கிடையில் வரும் தமிழ்ப் பேசும் மக்கள் தமக்குத் தேவையான அலகில் சேர வழிவகுக்க வேண்டும்.

### கிழக்கில் உள்ள சிங்கள மக்களை அவர்களின் மாகாணங்களுடன் இணைக்கலாம்

இன்னுமொரு யுக்தியைக் கையாளலாம். அம்பாறை மாவட்டத்தில் இருந்து அம்பாறைத் தேர்தல் தொகுதியையும் லகுகல உதவி அரச அதிபர் பிரிவையும் ஊவா மாகாணத்துடன் சேர்க்க வேண்டும். அதே போல் கோமரன்கடவல உதவி அரச அதிபர் பிரிவை திருகோணமலை மாவட்டத்தில் இருந்து பிரித்து வடமத்திய மாகாணத்துடன் இணைக்க வேண்டும். இந்த விதத்தில் கிழக்கில் குடிகொண்டிருக்கும் 75 சதவிகித சிங்கள மக்களை அவர்தம் மக்களுடன் சேர்த்து விடலாம். அதன் பின்னர் வடக்கையும் கிழக்கையும் இணைக்கலாம். இதனால் ஏற்படும் காணி நஷ்டத்தைப் புத்தளம் மாவட்டத்தை வடமாகாணத்துடன் சேர்ப்பதன் மூலம் ஈடு செய்யலாம்.

கண்டிய மன்னர் காலத்தில் புத்தளம் தெமள ஹத்பத்து என்றே அழைக்கப்பட்டு வந்து. தமிழர் வாழ் ஏழு பற்றுக்கள் என்பதே அதன் பொருள். புத்தளம் வாழ் மக்கள் தமிழ்ப் பேசும் மக்களே. இணைப்பின் பின் பொது எல்லைகள் இல்லாத ஓர் அலகாக பாரம்பரிய முஸ்லிம் இடங்கள் வடகிழக்கினுள் ஓர் அலகாக்கப்படலாம்.

நான் நண்பர் அஷ்ரப்புடன் இது பற்றி எல்லாம் கிட்டத்தட்ட நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் கருத்துக்கள் பரிமாறியுள்ளேன். அவ்வாறான ஏற்பாடுகள் சிங்களவருக்கும் நன்மை பயக்கும். முஸ்லிம்களுக்கும் நன்மை பயக்கும். கிழக்கில் தமிழர்களும் பாதுகாக்கப்படுவர்.

ஆகவே வடகிழக்கு இணைப்பு கிழக்குத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும் அவர்களின் தனித்துவத்தைப் பேணவும் அத்தியாவசியமானது. வடக்கு–கிழக்கு இணையாவிட்டால் கிழக்கில் இன அழிப்புக்கு காலக்கிரமத்தில் இடம் உண்டு. அழிக்கப்படும் இனம் பாரம்பரியமாக நூற்றாண்டுகள் காலம் அங்கு வாழ்ந்த தமிழ் இனமாகவே இருக்கும்.

### சமஷ்டி அவசியமானது

மூன்றாவது, சமஷ்டியின் அவசியம் பற்றியது. இறைமை பகிரப்பட்டு, அதிகாரங்கள் பகிரப்பட்டு நாடாளுமன்றத்திற்கு இணையான சட்டவாக்க அதிகாரத்தைப் பிராந்தியம் பெற்று, பகிரப்பட்ட அதிகாரங்களை மீளப்பெற முடியாதபடி ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட போதுதான் அங்கு சமஷ்டி உருவாகின்றது. புதிய அரசமைப்பு வரைவு முழுமையான சமஷ்டி ஆட்சி முறைமையின் அம்சங்களைக் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

2000ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்பு வரைவில் அரசானது மத்தியையும் பிராந்தியங்களையும் கொண்டதாக அமையும் என்று கூறப்பட்டது. தற்போதைய வரைவில் இலங்கை அதன் அரசமைப்பில் உள்ள தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற மத்திய மற்றும் மாகாணங்களைக் கொண்டிருக்கும் எனப்படுகிறது. இதில் மாகாண அரசு எந்தளவிற்கு குறித்த தத்துவங்களை பிரயோகிக்க முடியும் என்பது கேள்விக் குறியாகி இருக்கின்றது.

புதிய அரசமைப்பு வரைவில் தடுமாற்றந் தருஞ் சொற்பிரயோகங்கள் பெரும்பான்மை மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் நீதித் துறையினருக்குப் பக்கச் சார்பான தீர்மானங்களை வழங்க இடமளிக்கும். நாங்கள் சிங்களவருக்கு ஒரு முகம், தமிழர்களுக்கு இன்னொரு முகம் காட்ட முற்பட்டாலும் இந்த வரைவினால் வரும் பிரச்சினைகளைப் பெரும்பான்மையின நீதியரசர்களே தீர்க்கப் போகின்றார்கள்.

அவர்கள் ஏக்கிய இராஜ்ஜிய என்பது ஒற்றையாட்சியே என்று தான் கருத்துக்கொள்வர். எமது தமிழ் அரசியல் வாதிகளின் ஒருமித்த நாடு என்ற கருத்தை ஏற்று கொள்ளமாட்டார்கள். ஆகவே பிறரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல் எம்மை நாமே ஆள சமஷ்டி முறைதான் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதுவே தந்தை செல்வாவின் விருப்பமும்.

சமஷ்டி எவ்வாறு சிங்கள மக்களுக்குப் பாதகம் விளைவிக்கும் என்பதைச் சிங்கள அறிவியலாளர்கள் எமக்குக் கூற வேண்டும். அவற்றிற்கான தக்க பதிலை நாம் தருவோம். உண்மையில் சமஷ்டியானது வெவ்வேறு மாகாணங்களில் வாழும் சிங்கள மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமையும்.

எது எவ்வாறெனினும் குறித்த வரைவு கூட தற்போது அலரிமாளிகையில் வைத்துப் பூட்டியாகிவிட்டது என்றே கொள்ள வேண்டியுள்ளது. நெருக்குதல் இல்லாமல் பெரும்பான்மை சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கு எதுவுமே தர மாட்டார்கள் என்பது கண்கூடு. பிரதமர் ரணில் அதனை அண்மையில் தெட்டத் தெளிவாக நிரூபித்துவிட்டார். மனோ கணேசன் கூறியது போல் சிங்களத் தலைவர்களைத் தமது முன்மொழிவுகளைத் தருமாறு கூறிவிட்டு அரசமைப்பை தயாரிக்க நாம் உதவியதை விட்டு விட்டு நாம் வேறு விடயங்களிலேனும் வெற்றி கண்டிருக்கலாம்.

பயங்கரவாத தடைச் சட்ட நீக்கம், அரசியல் கைதிகள் விடுதலை, பொது மக்கள் காணிகள் விடுவிப்பு, படையினரை வடக்கில் இருந்து நீக்குதல் என்று எத்தனையோ விடயங்களை ரணிலுக்கு உதவி தருவதற்கு முன் நிபந்தனையாக இட்டு சாதித்திருக்கலாம். இப்பொழுது யானைக்கு அடிசறுக்கியுள்ளது. அகங்காரத்திற்கு அடி கொடுக்கப்பட்டுள்ளது. சாணக்கியம் சறுக்கிப் போயுள்ளது –என்றுள்ளது. (ஐ)

## சமஷ்டிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பு ஒற்றையாட்சிக்குள்ளேயே அமையும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள நிலையிலேயே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசமைப்பின் ஊடாக முன்வைக்கப்படும் தீர்வானது நீதி மற்றும் சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில் ஒருமித்த நாட்டுக்குள் பிரிக்கப்பட முடியாததாக இருப்பதை உறுதி செய்யும் வகையில் அமையவேண்டும்.

அதேவேளை, மாகாணங்களுக்கு நேர்மையான ஓர் அதிகாரப் பகிர்வையும் கொண்டிருக்க வேண்டும்.

இதுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு. எமது இந்தப் பரிந்துரைகள் இருந்தால் மட்டுமே புதிய அரசமைப்பை நாமும் எமது மக்களும் ஆதரிப்போம்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் மற்றும் தமிழ் மக்கள் ஆகியோரின் நிலைப்பாட்டை நாடாளுமன்றத்தில் நான் பல தடவைகள் தெரிவித்துவிட்டேன். அதேவேளை, என்னைச் சந்தித்த சர்வதேச சமூகப் பிரதிநிதிகளிடமும் நான் எடுத்துரைத்துள்ளேன்.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண கடந்த முப்பது வருடங்களாகப் பல்வேறு கருமங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. தற்போது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இதனை நாட்டின் நன்மை கருதி அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய அரசமைப்பு நிறைவேற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

நாட்டைப் பிளவுபடுத்துவது எமது நோக்கமல்ல. பிளவுபடாத ஒருமித்த நாட்டுள்ளேயே நாம் தீர்வைக் கேட்கின்றோம் – என்றார். (ஐ)

## ஹெரோய்ன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெவ்வேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்ட 22 வயதுக்குட்பட்ட நால்வருக்குக் கடும் எச்சரிக்கையுடன் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல்.

நால்வரும் தம் மீதான குற்றத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதனால் குற்றவாளிகள் நால்வருக்கும் 3 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. நால்வரும் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணத்தைச் செலுத்த வேண்டும்.

நால்வரும் இளவயதினர்களாக உள்ளனர். அவர்களின் எதிர்காலம் மற்றும் குடும்பப் பின்னணி என்பவற்றை மன்று கவனத்தில் எடுக்கிறது. அதனால் நால்வருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படுகிறது. ஒத்திவைக்கப்பட்ட 10 ஆண்டுகள் காலப்பகுதியில் அவர்கள் மீளவும் குற்றச்செயலில் ஈடுபட்டால் 3 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்று நீதிவான் ஏ.எஸ்.பி.போல் தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற எல்லைக்குள் உயிர்க்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் வெவ்வெறு சம்பவங்களில் 22 வயதுக்குட்பட்ட நான்கு இளைஞர்கள் பொலிஸாரால் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டனர்.

நால்வருக்கும் எதிராக தனித்தனி வழக்குகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தன. இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு வந்தபோது, நால்வரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். (ஐ-07)

## ஞானசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுபலசேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொதுமன்னிப்பில் வரும் பெப்ரவரி 4ஆம் திகதி விடுவிக்கப்படுவார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி ஜனாதிபதியால் தெரிவு செய்யப்படும் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படுவது வழமை. அந்த நடைமுறையின் கீழேயே ஞானசார தேரருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஞானசார தேரருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், கடந்த ஓகஸ்ட் 8ஆம் திகதி ஆறு ஆண்டுகள் அனுபவிக்கும் வகையில், 19 ஆண்டு சிறைத்தண்டனையை விதித்திருந்தது.

இந்த நிலையில் ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்யுமாறு சிங்களயே அபி என்ற அமைப்பைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடந்த நவம்பர் மாதம் நேரில் சந்தித்து வலியுறுத்தினர். அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, கடந்த சனிக்கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று ஞானசார தேரரைச் சந்தித்து பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வேலை வாய்ப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைவாய்ப்பு விடயங்களில் அவர்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் பகிரங்கமாக குற்றம் சாட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

அதேவேளை, ஆணைக் குழுக்களின் விசாரணைகளும், அறிக்கைகளும் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசாரணை ஆணைக்குழுக்கள் திருத்தச் சட்டவரைவு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆணைக்குழுக்களால் நீதி நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கையுடன் சிறுபான்மையினர் காணப்படுகின்றனர். அதன்படி இன, மொழி பாகுபாடின்றி பெரும்பான்மையினருடன் கைகோர்த்து பயணிக்கவும் சிறுபான்மையினர் காத்திருக்கின்றனர். ஆனால், போலிக் காரணங்களை முன்னிறுத்தி மறைமுகமாக மேற்கொள்ளப்படும் பாகுபாடுகள் வேதனையளிக்கின்றன.

சிறுபான்மையினர் கௌரவமாக வாழ்வதற்கு வழிவகுக்கின்ற கல்வி, வேலைவாய்ப்பு விடயத்தில் அநீதி இழைக்கப்படுகின்றது.

தொழில்வாய்ப்புக்கான பரீட்சைகளில் இனவிகிதாசாரப்படி தமிழர்கள் அதிகளவு சித்தியடைந்த பரீட்சைகளின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டு, நேர்முகப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன.

ஆணைக்குழுக்களின் விசாரணைகளும், அறிக்கைகளும் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன. இது தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை இன்மையைத் தோற்றுவித்துள்ளது – என்றார். (ஐ)

## ஞானசாரரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலகொட அத்தே ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பு வழங்குமாறு இலங்கையிலுள்ள சகல பௌத்த மத பீடங்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

அஸ்கிரிய பீடம், மல்வத்த பீடம், கோட்டே பீடம், அமரபுர மஹா நிக்காய ஆகியவற்றின் மகாநாயக்க தேரர்களின் கையெழுத்துடன் இந்தக் கடிதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தலதா மாளிகையின் தியவதனே நிலமே பிரதீப் நிங்கவும் ஞானசாரருக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவை என்பது தொடர்பிலேயே பிரச்சினைகள் காணப்படுகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள ஜும்மா பள்ளிவாசலில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் நேற்று கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சுமந்திரனும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை ஏமாற்றுகின்றனர். இதனை இல்லாமல் செய்ய மக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## சேனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புழுவின் தாக்கம் தற்போது வடக்கு மாகாணத்திலும் பரவி வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன்முறையாக படைப்புழுவின் தாக்கம் தொடர்பில் பதிவாகியுள்ளது.

முல்லைத்தீவின் கொக்கிளாய், குமுழமுனை மற்றும் கொக்குத்தொடுவாய் போன்ற பகுதியில் சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. அந்தப் பகுதிகளில் உள்ள சோளப் பயிர்ச்செய்கையிலேயே படைப்புழு தாக்கம் செலுத்தியுள்ளது.

அதேநேரம், கிளிநொச்சி மாவட்டத்தின் பளை, செல்வபுரம் போன்ற பகுதிகளிலும் படைப்புழுவின் தாக்கம் பரவியுள்ளது.

இதேவேளை, சேனா படைப்புழுவை ஒழிப்பதற்குச் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக விவசாய அமைச்சர் பி ஹரிசன் தெரிவித்துள்ளார்.

படைப்புழுவை ஒழிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அரசால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் பி ஹரிசன் குறிப்பிட்டார். இதற்கான நிதியை விரைவில் பெற்றுக் கொடுப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, மேலதிகப் பரிசோதனைகளுக்காகப் படைப்புழுவின் மாதிரியை அமெரிக்கப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் சோளம் உள்ளிட்ட சில துணைப் பயிர்ச்செய்கையைப் படைப்புழுக்கள் அதிகளவில் தாக்கியுள்ளன. சுமார் நூறு வகையான பயிர்ச்செய்கையைப் படைப்புழு தாக்கக்கூடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, படைப்புழுவை ஒழிப்பதற்குத் தேவையேற்படும் பட்சத்தில் இராணுவத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாக புத்தசாசன மற்றும் வட மேல் அபிவிருத்தி அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார். (ஐ)

## பிரிகேடியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை கைது செய்யுமாறு லண்டன் வெஸ்மினிஸ்டர் நீதிமன்றம் நேற்று முன் தினம் விடுத்த உத்தரவு தொடர்பில், பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

வியன்னா மாநாட்டு உடன்படிக்கையின் பிரகாரம் கடமைகளுக்காகப் பிரிட்டனுக்கு வருகை தந்த ராஜதந்திர அதிகாரி ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாது என இலங்கைத் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ பிரிட்டனில் தற்போது தொடர்ந்து வசிக்கவில்லை என்றும் தூதரகம் கூறியுள்ளது.

இதேவேளை, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு லண்டனில் பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணை உத்தரவு தொடர்பில் தாம் சட்ட வல்லுநர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

## நன்றாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பார்வையிடச் சென்ற மக்கள் மிகுந்த ஏமாற்றமடைந்தனர். அங்குள்ள காணிகள் பற்றைக் காடுகளாகக் காணப்பட்டன. உருப்படியாக இருந்த வீடுகள் பல அண்மையில் இடித்தழிக்கப்பட்டும் காணப்பட்டன.

அத்துடன் பல வீடுகளின் கதவு. ஜன்னல்கள், கூரைகள் பிடுங்கி எடுக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டதைப் பார்த்த மக்கள் கவலை வெளியிட்டனர்.

வலிகாமமல் வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் கடந்த பல வருடங்களாக இருந்த தையிட்டி வடக்கு மற்றும் தெற்கு மற்றும் ஒட்டகப்புலம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக 45 ஏக்கர் காணிகள் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இவ்வாறு விடுக்கப்பட்ட காணிகளை மக்கள் சென்று பார்வையிடுவதற்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய நேற்றுத் தமது காணிகளைப் பார்வையிட்ட மக்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

நீண்ட காலத்தின் பின்னர் நாங்கள் எங்கள் காணிகளுக்கு வந்துளோம். எங்கள் காணிகளைப் பார்வையிடுவதற்கு மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் வந்திருந்த எமக்கு இங்கு பார்த்தபோது ஏமாற்றமாகவும் கவலையாகவும் உள்ளது. அதேநேரம் எங்கள் காணிகள் விடுவிக்கப்பட்டமை மகிழ்ச்சியாகவும் உள்ளது.

தற்போது எங்கள் காணிகளில் பலரதும் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டிருக்கின்றன. சிலரது வீடுகள் இருக்கின்றன. அதே நேரம் பல வீடுகளின் கதவு, ஜன்னல், கூரைகள் பிடுங்கி எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்தக் காணிகள் விடுவிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்ட பின்னரே எங்கள் வீடுகள் பலவும் சேதமாக்கப்பட்டுள்ளன – என்றனர். (ஐ-07)

## ரெலோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத்

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) அடியோடு நிராகரித்துள்ளது. கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியியில் இது குறித்து தங்கள் நிலைப்பாடு என்ன என்று இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## வலி.வடக்கில் 39...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும், ஒட்டகப்புலத்தில் 15 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டன.

விடுவிக்கப்பட்ட காணியில் உள்ள வீடு ஒன்றை அலுவலகமாக மாற்றியுள்ளதுடன் அதன் சுவரில் சிங்கள மன்னர்களின் வரலாற்றுப்படங்களைப் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கியுள்ளனர்.

இந்தக் காணிகள் நேற்று முன் தினம் விடுவிக்கப்பட்ட போதும் நேற்றுக் காலையே காணி உரிமையாளர்கள் பார்வையிட அனுமதிக்கப்பட்டது.

இதன்படி நேற்று முன்தினம் வலி.வடக்கில் ஜே/249 தையிட்டி வடக்கு, ஜே/250 தையிட்டி தெற்கு ஆகிய பகுதிகளில் 19 ஏக்கர் காணி விடுவிப்புக்கான சான்றிதழை காங்கேசன்துறை இராணுவப் பொறுப்பதிகாரி வலி.வடக்குப் பிரதேச செயலரிடம் கையளித்தார்.

இருப்பினும் ஒட்டகப்புலத்தில் விடுவிக்கப்பட்ட 20 ஏக்கர் காணிக்கான சான்றிதழ்கள் பிரதேச செயலரிடம் இராணுவ தரப்பால் கையளிக்கப்படவில்லை.

இருந்தபோதும் ஒட்டகப்புலப் பகுதிகளை மக்கள் சென்று பார்வையிடுவதற்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

தையிட்டி தெற்கில் ஜே/249, ஜே/250 இல் விடுவிக்கப்பட்ட காணிகளில் உள்ள அநேகமான வீடுகள் இராணுவத்தினர் பயன்படுத்தியமையால் நல்ல நிலையிலேயே உள்ளன.

சில வீடுகளைப் படையினர் திருத்திமாற்றியுள்ளனர். அத்துடன் வீடு ஒன்றை அலுவலகமாக மாற்றியுள்ளதுடன் அதன் சுவரில் சிங்கள மன்னர்களின் வரலாற்றுப் படங்களைப் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கியுள்ளனர்.

காணியில் வளர்ந்த அரச மரத்தில் புத்தர் சிலை வைத்து வணங்கியுள்ளனர். எனினும் புத்தரை அங்கிருந்து எடுத்து சென்றுள்ளனர். கூடைப்பந்தாட்ட மைதானம் ஒன்றும் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-07)

## வலி.வடக்கில் இன்னும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளன எனத் தெரிவித்த வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோமசுந்தரம் சுகிர்தன், அவற்றையும் விடுவிப்பதனூடாகவே மீள்குடியேற்றம் முழுமைப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

வலி.வடக்குப் பிரதேசத்தின் தையிட்டி தெற்கு, தையிட்டி வடக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 19 ஏக்கர் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டன.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே சுகிர்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வலிகாமம் வடக்கில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து தற்போது விடுவிக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய தையிட்டி தெற்கு, தையிட்டி வடக்கு பிரதேசங்களிலிருந்து ஒரு தொகுதி காணிகள் 29 வருடங்களின் பின்னர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பது பொது மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக வலிகாமம் வடக்கில் இன்னமும் 3000 ஆயிரம் ஏக்கர் காணிகள் படையினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. அவ்வாறு படையினர் வசமுள்ள பொது மக்களின் அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்பட்டாலே மீள்குடியேற்றத்தை முழுமைப்படுத்த முடியும் – என்றார். (ஐ-07)

# காரைநகரில் நேற்று வயல் விழா







யாழ்ப்பாணம், ஜன. 23

காரைநகர் - பாலக்காடு இராஜேஸ்வரி அம்மன் ஆலய முன்றிலில் நேற்று முற்பகல் 10 .30 மணியளவில் வயல் விழா கொண்டாடப்பட்டது.

ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய நஞ்சற்ற உணவுகளை உற்பத்தி செய்வோம் என்ற தொனிப்பொருளில் இந்த வயல் விழா இடம்பெற்றது.

இதன்படி இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்திப் பயிரிடப்பட்ட மொட்டைக் கறுப்பன் நெல்லை இந்த விழாவில் ஏற்பாட்டாளர்கள் முக்கியத்துவப்படுத்தியிருந்தனர்.

மொட்டைக் கறுப்பன் நெல்லைப் பயிரிட்ட விவசாயின் வயல் காணிகளை அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டதுடன் அதன் நன்மைகள், விவசாய முறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இதேவேளை, இந்த வயல் விழாவில் யாழ்.மாவட்ட விவசாய திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் சிறிரங்கன் அஞ்சனா தேவி மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள், பொது மக்கள், விவசாயிகள், காரைநகர் இளம் விவசாயிகள் சங்கத்தினர் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர். (ஐ-07)

## கோப் குழுவின் தலைவராக மீண்டும் சுனில் ஹந்துநெத்தி

கொழும்பு, ஜன. 23

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக (கோப்) மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.



நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தின்போதே கோப் குழுவின் தலைவராக சுனில் ஹந்துநெத்தியைச் சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணை முறி மோசடிகள் தொடர்பாக விசாரணைகளை கோப் குழு நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இவ்வருட நடுப் பகுதியில் பொதுத் தேர்தலை நடத்த ஆலோசிக்கின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஜன. 23

**இந்த வருட நடுப்பகுதியில் பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பாக ஐ.தே.க தலைமை ஆராய்ந்து வருவதாகக் கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**பட்ஜெட்டின் பின்னரான கம்பெரலிய அபிவிருத்தித் திட்டத்துடன் மக்கள் நன்மையடைந்த நிலையில் அதனைச் சாதகமாக்கிப் பொதுத் தேர்தலுக்குச் செல்வது நல்லது என ஐ.தே.கவின் பல சிரேஷ்ட உறுப்பினர்கள் பிரதமரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு விளக்கியுள்ளனர்.**

இதேவேளை, முன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பொதுத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு ஆதரவு அளிக்கப்படுமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்தது.

இதனிடையே எதிர்வரும் ஓகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன்னர் கம்பெரலியஅபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் நிறைவு செய்யப்படவேண்டுமென நாட்டின் அனைத்து மாவட்ட செயலர்களுக்கும் திறைசேரி அறிவுறுத்தியுள்ளது.

ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளுக்கும் ரூபா 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி மொத்தம் ரூபா 4800 கோடி, மக்களின் வாழ்வாதாரம், அடிக்கட்டுமானத்தை உயர்த்த ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் சமரதுங்க கம்பெரலிய திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள், அவற்றை அமுல்படுத்துவது தொடர்பில் அனைத்து மாவட்ட செயலர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார். (ஐ)

## அதிஉயர் சபையில் அடிதடி; விசாரணை அறிக்கை நேற்று சபாநாயகரிடம் கையளிப்பு!



கொழும்பு, ஜன. 23

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கைகலப்பு தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நேற்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் 15,16 மற்றும் 17 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பில் விசாரணை செய்வதற்கு, பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறியின் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது.

பிரதிச்சபாநாயகர்தலைமையிலான இந்தக் குழுவில் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார கூட்டமைப்பின் எம்.பி. மாவை சேனாதிராசா, ஜே.வி.பி. எம்.பி. பிமல் ரட்னாயக்க, சமல் ராஜபக்ஷ, சந்திரசிறி கஜதீர ஆகியோர் அங்கத்தவர்களாக இடம்பெற்றனர்.

எனினும் சமல், சந்திரசிறி கஜதீர ஆகியோர் விசாரணைகளை புறக்கணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வவுனியாவில் ராணுவத்தின் கைவசமிருந்த மேலுமொரு தொகுதி காணிகள் மக்களிடம்!

யாழ்ப்பாணம், ஜன. 23

வவுனியா மாவட்டத்தில் இதுவரை காலமும் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த அரச மற்றும் தனியார் காணிகளின் மேலுமொரு தொகுதி இராணுவத்தினால் மக்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளது.



இந்தக் காணிகளைக் கையளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நேற்று முற்பகல் வடக்கு ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

வன்னி இராணுவக் கட்டளைத் தலைமையகத்தைப் பிரதிநிதித்துவம் செய்து 56ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரபாத் தெமட்டன்பிட்டிய காணிவிடுவிப்பிற்கான பத்திரத்தை ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனிடம் கையளித்தார். ஆளுநர் அதனை வவுனியா அரச அதிபர் ஐ.எம்.ஹனீபாவிடம் கையளித்தார்.

இதனடிப்படையில் வன்னி இராணுவக் கட்டளைத் தலைமையகத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 40.74 ஏக்கர் அரச காணிகளும் 13.64 ஏக்கர் தனியார் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று 34 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ். பல்கலைக்கழகத்தின் 34 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தின் முதலாம் பகுதி நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று இடம்பெற்றது . யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர்.எஸ். பத்மநாதன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் வேந்தர் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் வழங்கினார் .

இந்தப் பட்டமளிப்பு வைபவத்தில் கலைப்பீடம் (பகுதி), பிரயோக விஞ்ஞான பீடம், வியாபாரகற்கைகள் பீடம், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்(பகுதி), விவசாய பீடம், பொறியியல் பீடம், உயர் பட்டப் படிப்புகள் பீடம் மற்றும் சித்த மருத்துவப் பிரிவைச் சேர்ந்த 459 பட்டதாரிகளும், 156 டிப்ளோமாதாரிகளுமாக மொத்தம் 615 பட்டதாரிகள் பட்டம் வழங்கிகௌரவிக்கப்பட்டனர்.

புதிதாக நிறுவப்பட்ட பொறியியல் பீடத்தின் 48 பட்டதாரிகள் பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்று 2ஆம் அணியாக வெளியேறினர். (ஐ-07)






இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.